Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 90

வியாழக்கிழமை
24 பெப்ரவரி 2022

மாசி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**கொரோனா**
நேற்று 1,281
மொத்தம் 6,40,548

**உயிரிழப்பு**
நேற்று 31
மொத்தம் 16,086


கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பலவற்றில் எரிபொருளுக்காக மக்கள் வரிசைகளில் காத்திருப்பதை அவதானிக்க முடிந்தது. (எ-113)

# நீதி கோரி சர்வதேசத்தை நாடுவதில் தவறு இல்லை

## ஐக்கிய மக்கள் சக்தி தடாலடி

**கொழும்பு, பெப்ரவரி 24**

**உள்நாட்டில் நீதி கிடைக்காதபோது, சர்வதேசத்தை நாடுவதில் தவறில்லை. 1989ஆம் ஆண்டு நடந்த சிற்சில சம்பவங்களுக்கு அப்போதைய அரசு பொறுப்புக்கூறவில்லை - என்று மஹிந்தவும் ஒருகாலத்தில் சர்வதேசத்தை நாடியுள்ளார்.** 15

# வடக்கில் போதிய அளவு எரிபொருள் கையிருப்பு!

## வீணாக வரிசையில் நிற்கவேண்டாம் என்கிறது பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

யாழ்ப்பாணம், பெப். 24
வடக்கு மாகாணத்துக்குத் தேவையான எரிபொருள் போதியளவில் கையிருப்பில் உள்ளது. அதனைவிட காங்கேசன்துறையிலுள்ள சேமிப்புக் களஞ்சியத்திலும் எரிபொருள் உள்ளது. 15

முச்சந்தி முரளி




# ஒமிக்ரோன் தொற்றால் மன்னாரில் மூவர் சாவு!

## பூஸ்டர் டோஸ் ஏற்றுவதே பாதுகாப்பு என அறிவிப்பு

மன்னார், பெப்.24
மன்னார் மாவட்டத்தில் ஒமிக்ரோன் தொற்றால் மூவர் உயிரிழந்துள்ளனர். எனவே பொது மக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று 15

யாழ்ப்பாணம் சிறையில்

# தமிழ் அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்புப் போர்!

## ஆதரவாக உறவினர்களும் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப்.24
யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். 15

# இன்றும் 4 1/2 மணிநேர மின்வெட்டு

கொழும்பு, பெப்.24
இன்றும் நான்கரை மணி நேரத்துக்கு மேல் சுழற்சி முறையில் நாட்டில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று 15

மார்ச் 3 இல்

# யாழ். பல்கலையில் பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், பெப்.24
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப்பட்டமளிப்பு எதிர்வரும் மார்ச் மாதம் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.
பட்டமளிப்பு விழா 3 நாள்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் அமர்வு காலை 9 மணிக்கும், இரண்டாம் அமர்வு மு.ப.11.30 மணிக்கும், மூன்றாம் அமர்வு பிற்பகல் 2.30 மணிக்கும் 13



'காரைநகர் மாணிக்கவாசகர்' காலமானார்

யாழ்ப்பாணம், பெப்.24
காரைநகர் மாணிக்கவாசகர் என்று அழைக்கப்படும் ஈழத்துச் 13

# மின்வெட்டுக்கு எதிராக நீதிமன்றம் செல்லலாம்

## பொதுமக்களுக்கு ரணில் ஆலோசனை

கொழும்பு, பெப்.24
அறிவிக்கப்பட்ட கால அட்டவணையை மீறி மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிராகப் பொதுமக்கள் நீதிமன்றத்தை நாட முடியும் என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
உயர்தரப் பரீட்சைக்குத் 06

# கள்ள மௌனம் காக்கும் பீரிஸ்!

## நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பு சாட்டை

கொழும்பு, பெப்.24
தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக பிராந்தியங்களின் ஒன்றியம் வரைவைத் தயாரித்த பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், தற்போது அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பாகக் கள்ள 15

# போர்க்குற்ற விசாரணையை எதிர்கொள்ள வேண்டும் அரசு

## முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வலியுறுத்து



கொழும்பு, பெப்.24
போர்க்குற்றங்கள் நடக்கவில்லை என்று கூறி ஒளிவதைவிடவும், போர்க்குற்ற விசாரணைக்கு அரசு அச்சமின்றி முகங்கொடுக்கவேண்டும். எவரேனும் போர்க் குற்றங்களை இழைத்திருந்தால் உள்ளகப் பொறிமுறை மூலம் தண்டனை வழங்க வேண்டும் 15

# இந்திய மீனவர் அத்துமீறல் கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, பெப்.24
வடக்கு மாகாணக் கடலில் தொடர்ச்சியாக இந்திய மீனவர்கள் அத்துமீறி 15



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதுவுமே இல்லை நாடு பேரழிவில்!

## சஜித் விளாசல்



**கொழும்பு, பெப். 24**

**எண்ணெய் இல்லை, மின்சாரம் இல்லை, எரிவாயு இல்லை. முழு நாடும் பேரழிவுக்குச் சென்றுகொண்டிருக்கின்றது என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது நாட்டில் எரிவாயு, டீசல், மின்சாரம் போன்ற எதுவும் முறையாக இல்லை. கடந்த அரசாங்கத்தின்போது எதிர்க்கட்சியாக செயற்பட்ட தற்போதைய ஆளுங்கட்சியின் அமைச்சர்கள், ஒருமுறை மின்வெட்டு ஏற்பட்டபோது மின்சார சபைத் தலைவரும், இரண்டு முறை மின்வெட்டு ஏற்பட்ட போது, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரும், மூன்று முறை மின்வெட்டு ஏற்பட்டதையடுத்து அரசாங்கமும் பதவி விலகவேண்டும் எனக்கூறினார்கள். இன்று என்ன நேர்ந்துள்ளது - என்றார். (ம)

'யுகதனவி' ஒப்பந்தம்

# உடன்படாவிட்டால் உடன் வெளியேறுக

பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய 'யுகதனவி' மின் உற்பத்தி நிலைய உடன்படிக்கை குறித்து உடன்பாடில்லாத அமைச்சர்கள் பதவிவிலக வேண்டுமென சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

உச்சநீதிமன்றத்தில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யுகதனவி மின் உற்பத்தி நிலைய உடன்படிக்கை குறித்து அமைச்சரவையில் பல தடவைகள் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் முரண்பாடு இருந்தால் அமைச்சரவையை விட்டு அமைச்சர்கள் விலக வேண்டும். ஒப்பந்தத்தை எதிர்ப்போர் தொடர்ந்தும் அமைச்சரவையில் அங்கம் வகிப்பதன் மூலம் உடன்படிக்கையை அங்கீகரிப்பதாகவே பொருள்படும். அமைச்சரவையில் அங்கம் வகித்துக்கொண்டு அமைச்சரவை தீர்மானத்தை விமர்சனம் செய்வது கூட்டுப் பொறுப்பை மீறும் செயலாகும் - என்றார். (ம)

# தவறான முடிவெடுத்து 12 வயதுச் சிறுமி சாவு!

யாழ்ப்பாணம், பெப்.24

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரணவாய்மேற்கில் 12 வயது மாணவி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு நடந்துள்ளது. வீட்டில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே சிறுமி தவறான முடிவை எடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

கரணவாய் மகாவித்தியாலயத்தில் 7ஆம் தரத்தில் கல்விகற்கும் பாஸ்கரன் பட்சிகா என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளது. (எ-27)

# இயற்கைப் படுகொலைக்கு தள்ளப்படுகின்றார் ஷானி

## சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 24

ஷானியை 'இயற்கைப் படுகொலைக்கு' அரசாங்கம் தள்ளுகிறதா? என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் அவர் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்ததாவது:-

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் உயிருக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. குறிப்பாக அவரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் அரசாங்கத்தின் கொள்கை மிகவும் வருந்தத்தக்க விதமாக உள்ளது. மிகக் கொடூரமான முறையில் திட்டமிட்ட விதமாக 'இயற்கைப் படுகொலைக்குள்' அவர் தள்ளப்படுகிறாரா? என்ற நியாயமான சந்தேகம் எமக்கு உள்ளது. இதற்கு முன்னரும் ஷானி அபேசேகரவின் வாழ்க்கையை நெருக்கடிக்கு உள்ளாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. இன்று எல்லாமே ஒற்றைத் தன்மையான முடிவுகளாக மாறி வருகின்றன. இவ்வாறான நிலையில் ஷானி அபேசேகரவின் வாழ்க்கை குறித்து எமக்கு நியாயமான அச்சம் உள்ளது - என்றார். (ம)

# 37,500 மெற்றிக் தொன் டீசலுக்குக் கட்டணம்

கொழும்பு,பெப்.24

சிங்கப்பூர் நிறுவனத்துக்குச் சொந்தமான கப்பலில் கொண்டு வரப்பட்ட 37 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசலை விடுவிப்பதற்கான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 35.3 மில்லியன் அமெரிக்க டொலர் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்று எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. அதனடிப்படையில் குறித்த டீசல் தொகை விரைவில் தரையிறக்கப்படும் என்று அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

# கொழும்பு மாநகரில் மின்வெட்டு இல்லை!

கொழும்பு, பெப்.24

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என்று சிங்கள ஊடகமான 'லங்காதீப' செய்தி வெளியிட்டுள்ளது.

வர்த்தகர்கள் குழுவுக்கும், இலங்கை மின்சார சபைக்கும் இடையே எட்டப்பட்ட இணக்கப்பாடு காரணமாக மின் வெட்டு நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை,- கொழும்பு மாநகர் பகுதியிலேயே அரசியல்வாதிகளும், செல்வந்தர்களும் வசிக்கின்றார்கள் என்று சமூக வலைத்தளங்கள் கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றன. (எ-இ)

# எரிபொருளைப் பதுக்கும் நிலையங்கள் சோதனை

கொழும்பு,பெப்.24

எரிபொருள்களை மறைத்து விற்பனை செய்யும் நிரப்பு நிலையங்கள் தொடர்பில், விசேட சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்காக விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (ஒ-4-இ)

# கட்டிலின் கீழ் ஒளிந்துள்ளார் மின்சக்தி அமைச்சர் காமினி

கொழும்பு, பெப். 24

நாட்டில் தொடர்ந்து மின்சாரம் துண்டிக்கப்படுகின்ற நிலையில், மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே நாடாளுமன்றத்துக்கு வராது கட்டிலின்கீழ் ஒளிந்துள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் நேற்றுமுன்தின அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் தொடர்ந்து மின்சாரத் தடை ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக உயர்தரப் பரீட்சை நடைபெறும் நிலையில் நாட்டில் தொடர்ந்து மின்சாரத் தடை ஏற்படுகிறது. இதற்கு மின்சக்தி இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் நீங்கள் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன? என வினவினார். இதற்குப் பதிலளித்த மின்சக்தி இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, வாய்மூல விடைக்கான வினாவுக்கும் தற்போது நீங்கள் கேட்கும் மேலதிக வினாவுக்கும் பொருத்தமில்லை. மின்சாரம் தொடர்பில் வேறொரு கேள்வியை தனியாக முன் வைத்தால் அதற்கு நான் பதிலளிக்கிறேன் என்றார்.

இதையடுத்து கருத்து தெரிவித்த நளின் பண்டார;

கடந்த முறையும் இதுபோன்ற



கேள்வி ஒன்றுக்கு நீங்கள் பதிலளிக்காது நழுவிச் சென்றுள்ளீர்கள். இதுபோன்ற கேள்விகளுக்கு மின்சக்தி அமைச்சரான காமினி லொக்குகேயே பதிலளிக்கவேண்டும். ஆனால், காமினி லொக்குகே இப்போதெல்லாம் நாடாளுமன்றத்துக்கு வருவதில்லை. அவர் எங்கோ ஒளிந்துகொண்டிருக்கிறார். அவர் கட்டிலின் கீழ் இருட்டில் இருக்கிறார் - என்றார். (ம)

# எல்லைதாண்டிய மீன்பிடி தமிழக மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், பெப்.24

எல்லைதாண்டி காங்கேசன்துறைக் கடற்பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 9 பேர் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று இரவு கைது செய்யப்பட்ட 9 மீனவர்களும் இன்று அதிகாலை மயிலிட்டித் துறைமுகத்துக்குக்கொண்டுவரப்படுவார்கள் என்றும், யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பயங்கரவாதத் தடைச்சட்டம்

# சர்வதேச நியதிகளுக்கு அமைவாகத் திருத்தம்!



**கொழும்பு, பெப். 24**

**சர்வதேச நியதிகளுக்கு அமைவாக பயங்கரவாதத் தடைச்சட்டம் திருத்தப்படுகின்றது என்று தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.**

புதுடில்லியை தளமாகக் கொண்டுள்ள இராஜதந்திரப் படையினருக்கு மத்தியில் உரையாற்றிய போது வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்த மாநாட்டில் 83 தூதுவர்கள் கலந்து கொண்டனர். பயங்கரவாதத் தடைச் சட்டத் திருத்தம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மிகவும் விரிவான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வெளியிடுவதற்கான ஆரம்பப்படியாகும்.

பெப்ரவரி இறுதி வாரத்தில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத் தொடருக்கு முன்னதாக மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான முன்னேற்றம் குறித்த தகவல்களைப் பகிர்வதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

43 வருடங்களின் பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டம் சர்வதேச நியதிகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாகக் கொண்டுவரும் நோக்கத்துடன் திருத்தப்பட்டு வருகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கணிசமான திருத்தங்களில் தடுப்புக் காவல் உத்தரவுப் பிரிவுகளில் திருத்தங்களை மேற்கொள்ளுதல், கட்டுப்பாட்டு ஆணைகள், உத்தரவுகளை வெளிப்படையாக அங்கீகரித்தல், நீண்டகாலமாக தடுப்புக் காவலில் வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வழக்குகளை விரைவாகத் தீர்த்துவைத்தல், கருத்துச் சுதந்திரத்துக்கு இடையூறு விளைவிக்கும் பிரிவுகளை இரத்துச் செய்தல், நீதிவான்கள் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரிகளின் அணுகலுக்கான விதிகளை அறிமுகப்படுத்துதல், தடுப்புக் காவலில் உள்ள காலத்தில் துஷ்பிரயோகம் மற்றும் சித்திரவதைகளைத் தடுத்தல், குடும்பத்துடன் தொடர்புகொள்ளும் உரிமை, நீண்டகாலக் கைதிகளுக்கு பிணை வழங்குதல், வழக்குகளை நாளாந்தம் விசாரணை செய்தல் போன்ற அம்சங்கள் உள்ளடங்குகின்றன -என்றார். (ம)

# தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடரும்

### வட மாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு




மன்னார், பெப்.24

உறுதியான தீர்வு கிடைக்கும்வரை தமது போராட்டம் தொடரும் என வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

ஊதிய உயர்வு மற்றும் நிரந்தர நியமனம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தால் ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக கடந்தவாரம் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்துக்கான தீர்வு கலந்துரையாடல் மூலமாக பெற்றுத்தரப்படும் என ஆளுநர் இதன்போது உறுதியளித்தார். இதையடுத்துப் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. எனினும் ஆளுநரின் திருப்திகரமான பதில் கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும். அதுவரை நாங்கள் முன்பள்ளிகளுக்குச் செல்லப்போவதில்லை -என்றனர். (வ-213)

## மணல் திருட்டு

கிளிநொச்சி, பெப்.24

உருத்திரபுரம் நீவில் கமக்கார பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் புனரமைக்கப்பட்ட புதிய வீதியில், மழையால் ஒதுக்கப்பட்ட மணல் இரவு வேளைகளில் அள்ளப்படுகின்றது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை பல முறை எச்சரித்த போதும், அவர்கள் மணல் திருடுவதை நிறுத்தவில்லை. எனவே புனரமைப்புச் செய்யப்பட்ட வீதியைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீவில் கமக்காரர் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (ஒ-4-113)

## கொரோனாவால் முதியவர் சாவு!

சாவகச்சேரி, பெப்.24

தென்மராட்சிப் பிரதேசத்தில் மேலும் ஒரு முதியவர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளார்.

மட்டுவில் பகுதியைச் சேர்ந்த 82 வயதான முதியவர் நேற்றுமுன்தினம் மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டு, யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நேற்று அதிகாலை அவர் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து தென்மராட்சிப் பிரதேசத்தில், பெப்ரவரி மாதத்தில், கொரோனாவால் பீடிக்கப்பட்டு, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்துள்ளது. (ஒ-4-9)

## அமைச்சர் ஒருவருடைய மின்கட்டணம் நிலுவை!

கொழும்பு, பெப். 24

அரசின் முக்கிய அமைச்சரின் வீட்டின் மின்சாரக் கட்டணம் செலுத்தப்படவில்லை என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கிருலப்பனை- சரணங்கர வீதியிலுள்ள வீட்டுக்கான ஒரு கோடியே 28 லட்சம் ரூபா மின் கட்டணம் இது வரையில் செலுத்தப்படவில்லை என இலங்கை மின்சார சேவை சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

இது அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இல்லமாகும். தற்போது அதன் உரிமம் உயர் இராணுவ அதிகாரியின் பெயரில் உள்ளது. பாதுகாப்புக் காரணங்களுக்காக மின் துண்டிப்பை ஏற்படுத்த முடியவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)




**ஏட்டிக்குப் போட்டியா மன்னாரில மனு குடுக்கிற போராட்டம் நடக்கத் தொடங்கியிருக்கு. திருக்கேதீச்சரத்துக்கு போற பாதையில இருக்கிற மாந்தைச் சந்தியில புதிசா ஒரு கட்டட வேலை நடக்கத் தொடங்கியிருக்கு. முதலில அதுக்கு அத்திபாரம் கட்டேக்க, புத்தர் சிலை வைக்கத்தான் இதைக் கட்டுகினம் எண்டு ஒரு கதை வெளிக்கிட்டுது. அதால பம்மிக் கொண்டிருந்த கொஞ்சப்பேருக்கு 'அதிலை புத்தர் சிலை கட்டேலை. திருக்கேதீச்சரத்துக்கு யாத்திரிகர் மடம்தான் கட்டுகினம்' எண்டு உண்மை தெரிஞ்சவுடன், திடீர் ரோசம் வந்து, 'அந்தயாத்திரிகர் மடத்தைக் கட்டக் கூடாது' எண்டு மனு குடுத்திருக்கினம்.**

**இத்தனைக்கும் அந்த இடத்தில முந்தி யாத்திரிகர் மடம் ஒண்டு இருந்தது. சண்டைக்காலத்தில அது அழிஞ்சு போச்சுது. அதால எல்லா இடத்திலையும் உரிய அனுமதி எல்லாம் எடுத்து, திரும்ப அதே இடத்தில இப்ப யாத்திரிகர் மடத்தைக் கட்டுகினம். பகிடி என்னெண்டால், முந்தி இருந்த மடத்தை, சரியான அனுமதி எடுத்துக் கட்டுறதை நிப்பாட்டச் சொல்லி குடுத்த மனுவுக்கு உடனடி நடவடிக்கை எடுக்கிறவை, அதே இடத்தில சட்டவிரோதமாக, நீதிமன்ற உத்தரவை மீறி கட்டின சொரூபத்தை அகற்ற எதுவுமே செய்யேலை. இப்ப அந்த மடத்தைக் கட்ட அனுமதிக்க வேணும் எண்டு சொல்லி இன்னொரு தரப்பு எதிர்மனு குடுத்திருக்கினம். அதுக்கு 'சிவராத்திரி முடிய ரண்டு தரப்பையும் கூப்பிட்டுக் கதைச்சு ஒரு முடிவெடுப்பம்' எண்டு மேலதிகாரிமார் சொல்லியிருக்கினமாம்.**

**முந்தி வந்த செவியை பிந்தி வந்த கொம்பு மறைக்கிறதெண்டு சொல்லுவினம். இப்ப பிரச்சினை என்னெண்டால், ஒரு இடத்தில இருந்து அழிஞ்சுபோன மடத்தை திரும்பக் கட்டுறதால ஆருக்கு என்ன நட்டம்? மடம் கட்டுற இடத்தில பிரியோசனமா வேற ஏதும் கட்டலாம் எண்டதுதான் அதை எதிர்க்கிறவை முன்வைக்கிற வாதம். அப்பிடியெண்டால், சட்டவிரோதமாக கட்டின சொரூபத்தை கட்டினதுக்கு அதிலையும் பிரியோசனமா வேற அலுவலகங்களைக் கட்டச் சொல்லி அவை ஏன் மனு குடுக்கேலை? எல்லாம் மதம் பிடிச்ச சிலரின்ர விளையாட்டுத்தான்.**

**தமிழரின்ர ஒற்றுமையைச் சிதைக்க, சாதி, மதம் எண்ட சிலதுகளை சிங்கள அரசாங்கம் தூண்டிவிடுறது வழக்கம். அதுக்கு எங்கட ஆக்களும் எடுபட்டுப் போறதுதான் வேதனை. மடம் எண்டது, தனிய சைவர்கள் மட்டும் நிக்கிற இடமில்லையே. வேற மதக்காரரும் தங்கி நிண்டு களைப்பாறுற இடம்தானே. அதுவும் இலங்கையின்ர தொன்மையான, நிறைய பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் வாற திருக்கேதீச்சரத்தில இப்பிடி ஒரு மடம் கட்டுறது கனபேருக்கு பிரியோசனம் தானே? சரி, இப்ப மடம் கட்டுற இடத்தில் வேற கட்டடங்களை கட்ட வேணும் எண்டு அடம் பிடிக்கிறவை, அந்தக் காணி இவ்வளவு நாளும் சும்மா இருக்கேக்க ஏன் ஒரு கோரிக்கையோ, மனுவோ குடுக்கேலை? இப்பவாவது விளங்குதோ உதுக்குப் பின்னால ஒரு மதக்குரோதம் இருக்கெண்டு. இதைச் சனம் தெளிவா விளங்கி, இந்தக் குழப்பவாதியளின்ர நடவடிக்கைக்கு துணைபோகாமல் இருக்கிறதுதான் இப்பத்தைச் சூழலில எல்லாருக்கும் நல்லது.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த. உயர்தரப் பரீட்சை

# உயிரியல் வினாத்தாளில் ஏகப்பட்ட தமிழ்ப் பிழை!

## நாடாளுமன்றில் சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 24

**க.பொ.த. உயர்தரம் 2021 பரீட்சையில் கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற உயிரியல் வினாத்தாள் பகுதி 1 இல் தமிழ் மொழியில் விடப்பட்டுள்ள பல தவறுகள் காரணமாக பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகும் சந்தர்ப்பத்தை பல மாணவர்கள் இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் இந்த விடயத்தில் கல்வி அமைச்சர் உடனடியாக தலையிட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் கோரிக்கை விடுத்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இந்தக் கோரிக்கையை அவர் விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: க.பொ.த. உயர்தரம் 2021 பரீட்சையில் கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற உயிரியல் வினாத்தாள் பகுதி 1 இல் பல தவறுகள் காணப்படுகின்றன.

2 ஆவது வினாவில் பிரதானமாக என்பதற்குப் பதிலாக முக்கியமாக எனவும், 5 ஆவது வினாவில் விளை திறனானது என்பதற்கு பதிலாக வினைத்திறனானது எனவும், 7 ஆவது வினாவில் அ. 'பெறப்பட்ட' என்பதற்கு பதிலாக 'பெற்ற' எனவும் ஆ. 'கடத்தப்படுகின்றன' என்பதற்கு பதிலாக 'ஊடுகடத்தப்படுகின்றன' எனவும், மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதற்கு பதிலாக மாற்றம் ஏற்படுகின்றது எனவும், 9ஆவது வினாவில் கொம்புருத் தாவரங்கள் என்பதற்கு பதிலாக கொம்புத் தாவரங்கள் எனவும், 12ஆவது வினாவில் முதிர்ச்சியின்போது என்பதற்கு பதிலாக முதிர்ச்சிப் பருவத்தில் எனவும், 13ஆவது வினாவிலும் 39ஆவது வினாவிலும் வினைத்திறனாக என்பதற்குப் பதிலாக திறமையாக எனவும் , 13ஆவது வினாவில் திசைகோட் சேர்க்கை என்பதற்குப் பதிலாக திசைமுகப்படுத்தல் எனவும், 16ஆவது வினாவில் ஒளித்தொகுப்புச் செய்யும் என்பதற்குப் பதிலாக ஒளித்தொகுப்பி எனவும் தவறாக இடம்பெற்றுள்ளன. அதேபோன்று 17ஆவது வினாவில் விடுவிக்கத் தூண்டப்படும் என்பதற்கு பதிலாக தூண்டப்படும் எனவும், 18ஆவது வினாவில் அமைவிடம் என்பதற்கு பதிலாக இருக்கும் இடம் எனவும், 21ஆவது வினாவிலும் 44ஆவது வினாவிலும் சமிக்ஞை என்பதற்கு பதிலாக சைகை எனவும் கொடுக்கப்பட்டிருந்தன. 22ஆவது வினாவில் இயற்கையாக கொல்லும் என்பதற்குப் பதிலாக இயற்கைக் கொல்லும் எனவும், 24ஆவது வினாவில் பார்வைப் புலன் பரப்பு என்பதற்கு பதிலாக கட்புலப் புலன் பரப்பு எனவும், 31ஆவது வினாவில் தேவையானவையாகும் என்பதற்கு பதிலாக போதியனவாகும் எனவும், 40ஆவது வினாவில் படுக்கை என்பதற்கு பதிலாக படுகை எனவும் வந்துள்ளன. 44ஆவது வினாவில் சுரப்பிகளை என்பதற்கு பதிலாக சுரப்பிகளையும் எனவும், 47ஆவது வினாவில் தலைகீழாகக் காணப்படலாம் என்பது தலைகீழாக்கப்படலாம் எனவும், 48ஆவது வினாவில் தத்திகளினுள்ளும் தாவரங்களினுள்ளும் என்பது தத்திகளிலும் தாவரங்களிலும் எனவும் தரப்பட்டுள்ளன. வினா 20இல் ஆங்கில சிங்கள மொழி மூலங்களில் பயன்படுத்தப்பட்ட சோணையறை என்ற சொல்லுக்குப் பதிலாக சோணையறை கூடம் என்ற இரண்டு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது போன்றே இன்னும் பல பிழையான சொற்கள் மலிந்து காணப்படுகின்றன.

உயிரியல் வினாத்தாள் பகுதி 1 இல் தமிழ் மொழியில் விடப்பட்டுள்ள இவ்வாறான பல தவறுகள் காரணமாக பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகும் சந்தர்ப்பத்தை பல மாணவர்கள் இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் இந்த விடயத்தில் கல்வி அமைச்சர் உடனடியாகத் தலையிடவேண்டும் -என்றார். (ம-22)

---

## இளம் குடும்பஸ்தர் ஹெரோய்னுடன் கைது

யாழ்ப்பாணம், பெப்.24

ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாய்ப்பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 30 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது. சந்தேக நபர் அதே பகுதியைச் சேர்ந்தவர் என்றும், ஏற்கனவே திருட்டு போன்ற வழக்குகளில் தொடர்புடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-125)

---

## சிவராத்திரியில் சொற்பொழிவும் பட்டிமன்றமும்

யாழ்ப்பாணம்,பெப்.24

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிவராத்திரியை முன்னிட்டு, சிறப்பு நிகழ்வுகள் எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது. திடற்புலம் நரசிங்க வைரவர் ஆலயத்தில் மாலை 6.30 மணிக்கு "சிவனுக்கு உகந்தது சிவராத்திரி " எனும் தலைப்பில், இளம் சைவப்புலவர் ச.நவநீதன், உரும்பிராய் சிவகாமி அம்பாள் சமேத சிவபுரீஸ்வரர் திருக்கோவிலில் மாலை 7.30 மணிக்கு "சிவராத்திரி மகிமை" எனும் தலைப்பில் இளம்சைவப்புலவர் ச.நவநீதன், நாரந்தனை சரவணை கர்ணந் தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் இரவு 8 மணிக்கு " சிவ விரதங்களில் சிவராத்திரி " எனும் தலைப்பில் சைவப்புலவர் செ.த.குமரன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

அன்றையதினம் மாலை 9.30 மணிக்கு பன்னாலையூர் தரன் பட்டிமன்றக்குழு வழங்கும் சிறப்புப் பட்டிமன்றம் இளம்சைவப்புலவர் நித்திய பாபுதரன் தலைமையில் "சமயப் பண்பாட்டு விழுமிய வளர்ச்சியில் அதிக அக்கறை கொள்பவர்கள் " ஆண்களா? பெண்களா? எனும் விடயப்பொருளிலும், ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவிலில் நள்ளிரவு 12 மணிக்கு "இன்றைய பெற்றோர் சமய கலாசார வாழ்க்கை முறைமை இளையவர்களுக்கு " சாதகமானதா? பாதகமானதா? என்ற தலைப்பில் இளம் சைவப்புலவர் நித்தியபாபுதரன் தலைமையிலும் இடம் பெறும். (ஒ-4-இ)

---

சேமலாப நிதிய சட்டத்திருத்தம்

# 30 வீதமான நிதியை இலகுவாகப் பெறலாம்

## அமைச்சர் நிமல் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 24

கொண்டு வரப்படவுள்ள ஊழியர் சேமலாப நிதியின் புதிய சட்டத் திருத்தத்துக்கு அமைய எதிர்காலத்தில் 30 வீதமான நிதியை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என தொழிலாளர் நலத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

> " எதிர்காலத்தில் உறுப்பினர்கள் தமது தேவைகளுக்காக 30 வீதமான நிதியை ஊழியர் சேமலாப நிதியிலிருந்து இலகுவாகப் பெற்றுக் கொள்ளமுடியும்

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தொழிலாளர் ஆலோசனை சபையின் மாதாந்தக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுவரை, ஊழியர் சேமலாப நிதியின் 30 வீதமான பயனாளிகளின் நிதி வீட்டுக் கட்டுமான பணிகள் அல்லது மருத்துவ சிகிச்சைக்காக மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளன. அதைப் பெறுவதற்கு, விண்ணப்பதாரர்கள் கூடுதல் ஆவணங்களைச் சமர்ப்பிக்கவேண்டியிருந்தது. பல சிறப்பு ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய விதிமுறைகள் காரணமாக ஊழல், முறைகேடுகள் மற்றும் மோசடி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றமை தெரியவந்துள்ளது.

இந்த ஆவணங்களை தயாரிப்பதில் விண்ணப்பதாரர்கள் பெரும் தொகையை செலவு செய்வதாக கிடைத்த முறைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு தேவையற்ற செலவுகளைக் குறைக்கும் நோக்கத்தில் இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனவே, எதிர்காலத்தில் உறுப்பினர்கள் தமது தேவைகளுக்காக 30 வீதமான நிதியை ஊழியர் சேமலாப நிதியிலிருந்து இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (ம)

---

## திருட்டுப்போன மீன்வலை பற்றையிலிருந்து மீட்பு

### அராலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப்.24

திருட்டுபோன ஒன்றரை லட்சம் பெறுமதியான மீன் வலையொன்று பற்றைக்குள் இருந்து மீட்கப்பட்ட சம்பவம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது; அராலி தெற்கு கடற்கரையில் மீன்வலை தொழிலுக்காக வைக்கப் பட்டபோது வலை திருடப்பட்டுள்ளது. அவர் தனது சக தொழிலாளர்களுடன் இணைந்து கடற்கரைப் பகுதிகளில் தேடுதல் நடத்தினார். கடற்பரப்புக்கு தொலைவாகவுள்ள பற்றைக் காட்டுக்குள் வலை மறைத்து வைக்கப்பட்டமை தெரியவந்ததையடுத்து அவர் அதனை எடுத்து வந்துள்ளார். (வ-125)

---

## குமுதினிப் படகு விரைவில் திருத்தம்

நெடுந்தீவு - குறிகாட்டுவான் கடற்போக்குவரத்தில் ஈடுபட்ட குமுதினிப்படகு, விரைவில் புனரமைக்கப் படவுள்ளது.

நீண்ட நாள்களாக செயற்பாடற்ற நிலையில் உள்ள படகு குறித்து, பிரதேச மக்களால் கடற்றொழில் அமைச்சருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. இதனையடுத்து ஒரு கோடி 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தகாரருக்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு, இந்த மாத இறுதியில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-4-27)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 வயதுக்கு மேற்பட்ட

# சிறுவர்களுக்கு விரைவில் கொரோனாத் தடுப்பூசி?

**கொழும்பு,பெப்.24**

**5 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கும் விரைவில் கொரோனாத் தடுப்பூசி செலுத்த சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.**



இது தொடர்பில் சிறுவர் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவிக்கையில்;

கொரோனாத் தொற்றுக் காரணமாக நாளாந்தம் மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதனால் சிறுவர்களுக்குத் தடுப்பூசி வழங்கப்படாவிட்டால், நோய் நிலைமை மோசமடைந்து சிக்கல்கள் ஏற்படும் அபாயம் உள்ளது - என்றார். (ஒ-4,இ)

# தடுப்பூசித் திட்டத்தால் கொரோனா கட்டுக்குள்

### இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி தெரிவிப்பு

கொழும்பு,பெப்.24

இலங்கையில் வெற்றிகரமான தடுப்பூசித் திட்டத்தால், கொரோனாவைக் கட்டுப்படுத்த முடிந்தது என்று ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்று நோய்கள் மற்றும் கொரோனாக் கட்டுப்பாடு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த இரண்டு ஆண்டுகளில் புதிய கொரோனா வைரஸ்கள் தோன்றி, ஊரடங்கு மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதனால் டெங்கு பரவலும் குறைந்திருந்தது.

நாடு நீண்ட காலத்துக்கு மூடப்பட்டிருந்ததால், குப்பை சேகரிக்கும் பகுதிகளில் டெங்கு நுளம்பு உற்பத்தி குறைந்திருந்தது. இதனால் டெங்கு பரவல் குறைந்தது. 2022 ஆம் ஆண்டில் இதுவரை 9 ஆயிரத்து 957 டெங்குத் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.



அதே போன்று ஜனாதிபதியின் நேரடியான ஈடுபாட்டுடன் வெற்றிகரமான தடுப்பூசித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதால், கொரோனாத் தொற்றையும் கட்டுப்படுத்த முடிந்தது - என்றார். (ஒ-4-இ)

## புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப். 24

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் புத்தகக் கண்காட்சி நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நாளை 25ஆம் திகதி, நாளை மறுதினம் 26ஆம் திகதி மற்றும் எதிர்வரும் 27ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள நிகழ்வில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடுகளின் கண்காட்சியும் விசேட விலைக் கழிவுடன் விற்பனையும் இடம்பெறவுள்ளன.

கண்காட்சிக்கு அனைவரையும் வருகை தந்து பயன்பெறுமாறு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ-ரி)

## சிறுவர்களிடையே தொற்று அதிகரிப்பு

கொழும்பு,பெப்.24

கொரோனாத் தொற்றுக் காரணமாக நாளாந்தம் மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று லேடி ரிஜ்வே சிறுவர் மருத்துவ மனைப் பணிப்பாளர் மருத்துவர் ஜி. விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்குச் சமமாக, வைரஸ் காய்ச்சல் மற்றும் டெங்குக் காய்ச்சல் போன்றன பரவி வருகின்றன. எனவே பெற்றோர் தமது பிள்ளைகளின் ஆரோக்கியம் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-4,இ)

# வைரலாகின்றது தயாசிறி பாடிய 'தமிழா தமிழா'!

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ்ப்பாணம், கரவெட்டியில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட மாநாட்டில் பங்கேற்ற, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பாடிய 'தமிழா தமிழா நாளை நம் நாளே, தமிழா தமிழா நாடும் நம் நாடே' பாடல் தொடர்பான காணொலி வைரலாகி வருகிறது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்ட கூட்டத்தில் வைத்தே அவர் இந்தப் பாடலை பாடியுள்ளதுடன், இன்னும் சில தமிழ் பாடல்களையும் பாடியுள்ளார். (ம)



# திருத்தம் செய்யப்பட்ட 200 பஸ்கள் சேவைக்கு

கொழும்பு,பெப்.24

பழுதடைந்து, பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டிருந்த 200 பேருந்துகள், மறுசீரமைக்கப்பட்டு, மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதனை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பார்வையிட்டார்.

வாகன ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவின் யோசனைக்கமைவாக, போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சியின் ஆலோசனையின்பேரில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டை அடுத்து, பழுதடைந்த, சேவையிலிருந்து நீக்கப்பட்ட பேருந்துகளைப் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முதற்கட்டமாக 273 பேருந்துகளை மறுசீரமைத்துச் சேவையில் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை கடந்தவருடம் முன்னெடுக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக, நாடு முழுவதிலுமுள்ள 107 டிப்போகளில் காணப்பட்ட 200 பேருந்துகள் புதுப்பிக்கப்பட்டன. இதற்காக 136 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

இலங்கைப் பொதுப் போக்குவரத்துச் சேவைச் சங்கத்தின் முழுமையான ஒத்துழைப்பின்கீழ், இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் லக்திவ பொறியியல் நிறுவனம் ஆகியன இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்தன. (ஒ-4,இ)

## பேச்சுத்திறன் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 24

பாலர் கல்விக்கழக மாணவர்களின் பேச்சுத்திறன் நிகழ்வு இன்று முற்பகல் 9 மணிக்கு ராஜா கிறீம் கவுஸ் கம்சிகா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் மாணவர்களின் தமிழ், ஆங்கில மொழிப் பேச்சுத்திறன்கள் இடம்பெறுவதோடு மாணவர்களைக் கௌரவித்து, பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளன.

பாலர் கல்விக்கழகத் தலைவர் கலாநிதி.பா.காசிநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.சாந்தையர்மடம் சைவசமய அபிவிருத்திக் கழகத்தலைவர் இரா.செல்வவடிவேல் கலந்துகொள்வார். (ஒ-ரி)



பேருந்து மிதிபலகையில் பயணம் மேற்கொள்வதால் ஏற்படும் விபரீதங்களைத் தவிர்க்கும் முகமாக விழிப்புணர்வு ஸ்ரிக்கர்கள் சுன்னாகம் றோட்டரிக் கழகத்தினரால் யாழ்ப்பாணம், சுன்னாகம் மற்றும் கோண்டாவில் பேருந்துகளில் ஒட்டப்பட்டன. (ஒ-ரி1,159)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம், தெல்லிப்பழை பிரதேச செயலக மகளிர் அமைப்புக்களுடன் இணைந்து நடத்திய மனைப்பொருளியல் பயிற்சி வகுப்புகளில் உருவாக்கப்பட்ட ஆக்கப் பொருள்களின் கண்காட்சி அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பயிற்சியை நிறைவுசெய்த 17 பயிலுநர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ச-9)



நெல்லியடி இராஜ கிராமத்தில் வாழும், பொருண்மியம் நலிந்த கண்பார்வை குறைந்த 150 பேருக்கு, 'பூமணியம்மா' அறக்கட்டளையின் ஸ்தாபகர் விசுவாசம் செல்வராசாவின் நிதிப் பங்களிப்பில் மூக்குக் கண்ணாடிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஒ-ரி1)





செல்வபுரம் புனித யூதாததேயு முன்பள்ளியில் பயின்று பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்களுக்குரிய பிரியாவிடை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு பங்குத்தந்தை அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் அடிகளார், கரைதுறைப்பற்று பிரதேசசபை உபதவிசாளர் மரியநாயகம் தொம்மைப்பிள்ளை உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-ரி1-246,19)



காங்கேசன்துறை நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயத்தில் 1996 ஆம் ஆண்டு உயர்தரத்தில் கல்விகற்ற மாணவர்களின் நிதியில் அமைத்துக்கொடுக்கப்பட்ட திறன் வகுப்பறை அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. (ஒ-ரி1-9)



மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான பிரசாத் அரங்கில் பொங்கல் விழாவும் கௌரவிப்பும் அண்மையில் நடைபெற்றன. இதன்போது சிங்கள, ஆங்கில பேச்சு போட்டிகள், சங்கீத, நடனப் போட்டிகள் ஆகியவற்றில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதோடு கலாபூஷணம் ராகினி திருக்குமரனுக்கு மூளாய் சிவப்பிரகாச வித்தியாலய அதிபர் திருமதி சுந்தரபாரதி சிவமலர் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவித்தார். (ஒ-ரி1-27)







பொதுஜன பெரமுனவின் வன்னி மாவட்ட மகளிர் சம்மேளனக் கூட்டம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் தலைமையில் வவுனியா நகரசபை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ம)



கைதடி தெற்கு தக்கடியன்புலம் ஸ்ரீ ஞானவைரவர் சுவாமி கோவிலின் பூசகர் ஸ்ரீலஸ்ரீ சு.குணசேகரம் ஆலய பரிபாலன சபையால் அண்மையில் கௌரவிக்கப்பட்டார். (ஒ-ரி1-159)

## மின்வெட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோற்றும் மாணவர்களுக்கு மின்வெட்டு கவலையை ஏற்படுத்தும். உயர்தரப் பரீட்சை முடியும்வரையில் மின்வெட்டு நடைமுறைப்படுத்துவதை நிறுத்த வேண்டும்.

வெவ்வேறு நேரங்களில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுவதால் அது தொடர்பாக மனித உரிமை மீறல் வழக்குத் தொடர முடியும் - என்றார்.

இது தொடர்பில் பதிலளித்த கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன, மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும்போது பரீட்சைகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. பரீட்சைகள் திணைக்களம், இலங்கை மின்சார சபை மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு என்பவற்றுடன் கலந்துரையாடியே முடிவுகள் எடுக்கப்படுகின்றன - என்று கூறினார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## எரிபொருளே எல்லாமும்!

டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி போன்று நாளுக்கு நாள் தேய்வடைந்துவந்த இலங்கையின் எரிபொருள் இருப்பு இன்று வெற்றுவெறிதாகிப் போகும் விளிம்பு நிலையை அடைந்திருக்கின்றது. இதன் எதிர்வினையாக நேற்று சுமார் 4 மணிநேரத்துக்கும் அதிகமாக நாட்டின் பல பகுதிகள் படிப்படியாகவும் – பகுதியளவிலும் இருளில் மூழ்கியிருக்கின்றன. நாட்டை இருளில் வைத்திருப்பதால் மின்னுற்பத்திக்குத் தேவையான எரிபொருளை மீதப்படுத்தலாம்தான். எரிபொருளுக்கு இருக்கக்கூடிய இயல்பானதும் நியாயமானதுமான கேள்வியை வலிந்து இல்லாமலாக்கி அதன் இருப்பைத் தக்கவைக்கலாம். ஆனால், இது எந்தளவு தூரம் சரியானது? இது வினைத்திறனான நடவடிக்கையா? என்றால் இல்லவேயில்லை.

எரிபொருள் இருப்பை இழப்பதால் அல்லது சீரான முறையில் எரிபொருளைப் பெறமுடியாததால் ஏற்படும் இழப்பை வெறுமனே போக்குவரத்தோடும் மின்தடையோடும் மட்டுப்படுத்திவிட முடியாது. காரணம் சங்கிலிக் கோர்வைபோன்று அனைத்துத் துறைகளின் இயங்கு நிலைக்கும் எரிபொருள் இன்று தவிர்க்க முடியாத மூலப்பொருள் ஆகிவிட்டது. எரிபொருள் இல்லாமல் எதுவுமே இல்லையென்ற நிலைதான் இன்று.

மின்தடையால் இருளில் மூழ்கிப்போன தேசமொன்று ஒருபோதும் சுற்றுலாவிகளைக் கவராது. கொரோனாவாலும் அரசின் இதர முரண் முடிவுகளாலும் அஸ்தமித்துப் போயுள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் தூக்கிநிறுத்த வேண்டுமாயின் – சீர்படுத்த வேண்டுமாயின் அதில் சுற்றுலாத்துறையின் வகிபங்கு கனதியானது. எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால் மின்பிறப்பாக்கிகளுக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்ளவும் பெருஞ்சிக்கல் ஏற்படும். நட்சத்திர விடுதிகள்கூட இருளில் மூழ்கக்கூடிய சாத்தியம் அதிகம். இப்படியொரு பின்னணியில் இந்த நிலைமை எவ்வாறு சுற்றுலாவிகளைக் கவரும்?

எரிபொருளுக்குத் தொடர்ச்சியான தட்டுப்பாடுகள் ஏற்பட்டு, மின்பிறப்பாக்கிகளுக்குத் தேவையான எரிபொருள் வழங்கப்படாத பட்சத்தில் இனிவரும் வாரங்களில் இன்னுமின்னும் அதிகளவான மணிநேரங்கள் நாடு இருளில் மூழ்கக்கூடிய சாத்தியங்கள் இருக்கவே செய்கின்றன. இந்த நிலைமை ஏற்கனவே சரிவில் வீழ்ந்துகிடக்கும் நாட்டை மேலும் பெரும் பின்னடைவுக்குள் தள்ளவே செய்யும். ஆக, தற்காலிகத் தீர்வு என்ற அடிப்படையில் இந்த அரசாங்கம் முன்வைக்கும் ஒவ்வொரு நகர்வுகளும் ஏதோவொரு பெரும் சரிவை நோக்கியே அமைகின்றன. இந்த நீண்ட மின்தடையின் பின்விளைவும் அதுவே.

அள்ள அள்ளக் குறையாத கச்சா எண்ணெய்வளம்கொண்ட சவூதி அரேபியா இன்று தன் மின்தேவையை எரிபொருளை மட்டுமே சார்ந்ததாக குறுக்கிக்கொள்ளவில்லை. பட்டத்து இளவரசராக பின் சல்மான் பொறுப்பேற்ற பின்னர், நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு சில நடவடிக்கைகளை முன்னெடுத்தார். கச்சா எண்ணெய் தீர்ந்துவிட்டால் என்ன செய்வது? என்ற அடிப்படையில் மாற்று மின் கட்மைப்பை சூரிய சக்தியை மையமாக வைத்து நிறுவினார். இன்று சவூதியில் மின்சாரம் கச்சா எண்ணெயை மட்டுமே கொண்டதாக அல்லாமல் சூரிய சக்தியையும் மையப்படுத்தி மிளிர்கின்றது. போக்குவரத்துத் துறையானது இலத்திரனியல் வாகனங்களையும் பொதுப்போக்குவரத்தையும் மையப்படுத்தியதாக மாறிவிட்டது. இதுவொன்றும் பல ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் அல்ல. கடந்த மூன்றாண்டுகளில் சவூதி ஏற்படுத்திய மாற்றங்கள் இவை.

இத்தனைக்கும் எரிபொருளில் முற்றுமுழுதாக அந்நிய தேசங்களைச் சார்ந்திருக்கும் இலங்கை என்ன செய்தது? வாரத்தில் மில்லியன் கணக்கான பீப்பாய் கச்சா எண்ணெயை உற்பத்திசெய்யும் திறனுள்ள சவூதியே மாற்று மின்கட்டமைப்பைச் சிந்தித்துக்கொண்டிருந்த அதே நேரத்தில் இலங்கையில் பணம் அச்சடிக்கும் இயந்திரங்கள் இரவு பகலாக ஓயாது உழைத்துக் கொண்டிருந்தன. காகிதக் குப்பைகளாக அவை ரூபாக்களை வெளித்தள்ளின. இன்று டொலரும் இல்லை. எரிபொருளும் இல்லை.

மாற்று மின்கட்டமைப்பைப் பற்றிய திட்டம், தேடல் இலங்கை அரசாங்கத்திடம் இருந்திருந்தால்கூட இன்று பாதிப்பிரச்சினை இருந்திருக்காது. என்ன செய்வது எம்மை இருள் இறுகப் பற்றிப்பிடித்துப் பலகாலம். ஆனால், அது மின்தடையால் ஏற்பட்ட இருளல்ல.

### நாளொரு நல்வார்த்தை

"வாழ்க்கை என்பது ஊஞ்சலில் உட்கார்ந்து ஊசலாடுவது அல்ல; புயலுக்கு நடுவே படகைச் செலுத்துவது போன்றது".
- காண்டேகர்




# அவசரக் கூட்டத்தை புறக்கணித்த அமைச்சர்கள்

## அரசுக்குள் உச்சப்பிளவு

**கொழும்பு, பெப். 24**

**ஜனாதிபதி கோத்தாபய தலைமையிலான ஆளுங்கட்சியின் அவசரக் கூட்டத்தில் அரசாங்க எதிர்ப்பு அமைச்சர்கள் சிலர் கலந்துகொள்ளவில்லை என்று தெரியவருகின்றது.**

அரசாங்கத்தின் பங்காளிகளான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோரே இந்தக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அத்துடன், சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் ஆளுங்கட்சிக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தில் சர்ச்சைக்குரிய நபராக மாறிவரும் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா ஆளுங்கட்சிக் குழு கூட்டத்தில் பங்கேற்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# இந்திய இழுவைப் படகுகளால் இலங்கையின் மீன்வளம் அழிவு

## பேராசிரியர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,பெப்.24

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலால், நாட்டின் மீன்வளம் பெரிதும் அழிவடைகின்றது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலைப் பேராசிரியர் சூசை ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

2014 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில், இறால் அதிகளவில் பிடிக்கப்பட்டுள்ளது. இன்றைய காலகட்டத்தில் தரமான இறாலின் விலை கிலோ 2 ஆயிரம் ரூபாவாகக் காணப்படுகின்றது. 8 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான இறால் பிடிக்கப்படுகின்றது. கிட்டத் தட்ட 65.1 மில்லியன் கிலோ (6 கோடி 51லட்சம்) தூக்கி வீசும் கழிவு மீன்களை வருடாந்தம் பிடிக்கின்றனர். அதனுடன் சங்கு, நண்டு, கடல் அட்டை என்பனவும் பிடிக்கப்படுகின்றன. இதனால் வடபகுதி மீனவர்களின் மீன்வளம் இழக்கப்படுவதோடு, தேசிய மீன் வளமும் இழக்கப்படுகின்றது. கடல் அட்டையை இந்தியாவில் சட்ட ரீதியாகப் பிடிக்க முடியாது. ஆனால், இலங்கையில் இருந்து சட்டவிரோதமாகப் பிடித்துச் சென்று உலர்த்தி மறைமுகமான முறையில் ஏற்றுமதி செய்கின்றனர் - என்றார்.

(ஒ-4,125)

## மீண்டும் இந்தியாவுக்கு பறக்கின்றார் பஸில்!

கொழும்பு, பெப். 24

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச மற்றும் திறைசேரி செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல ஆகியோர் இந்தியாவுக்கு உத்தியோக பூர்வப் பயணமொன்றை நாளை மேற்கொள்ளவுள்ளனர்.

2.4 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவியை இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக நிதியமைச்சர் பஸில் அண்மையில் இந்தியாவுக்குச் சென்றிருந்த நிலையில், குறுகிய நாள்கள் இடைவெளியில் அவர் மீண்டும் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

நாளை 25.02.2022 வெள்ளிக்கிழமை மாசி 13

சுபநேரம் : 06.29 – 07.59
ராகுகாலம் : 10.59 – 12.29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜனாதிபதி செயலகம் எதிரில்

# நில அபகரிப்புக்கு எதிராக இன்று பெரும் போராட்டம்!

**கொழும்பு, பெப். 24**

**வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் நில அபகரிப்புக்களுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி செயலகத்தின் எதிரில் இன்று போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.**



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களே ஜனாதிபதி செயலகத்துக்கு எதிரில் போராட்டத்தில் ஈடுபடுவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

முன்னதாக, கடந்த திங்கட்கிழமை அமைச்சர் சமல் ராஜபக்சவின் அலுவலகத்துக்கு எதிரில் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டனர். மகாவலி எல் வலயத்துக்கு நிலங்களை ஒதுக்குவது தொடர்பில் மாவட்டச் செயலருடன் அமைச்சர் ஒழுங்கமைத்த சந்திப்பை அடுத்தே இந்தப் போராட்டத்தை நடத்தத் திட்டமிடப்பட்டது. பின்னர் தமிழ்க் கட்சிகளின் போராட்டம் தொடர்பான தகவல் அமைச்சருக்குக் கிடைத்ததை அடுத்து கலந்துரையாடல் கைவிடப்பட்டது. இதையடுத்து போராட்டமும் கைவிடப்பட்டது. (ம)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 08 . 1946



மறைவு 22 . 02 . 2022

### கருணாகரன் சாரதாம்பாள்

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாரதாம்பாள் கருணாகரன் அவர்கள் நேற்று முன்தினம் (22.02.2022) செவ்வாய்க்கிழமை யாழ். மருத்துவமனையில் காலமாகி விட்டார்.

காலஞ்சென்றவர்களான கொழும்பு ஆமர்வீதி வர்த்தகர் ஆர்.எம்.சின்னத்தம்பி முத்தம்மா தம்பதிகளின் அருமை மகளும், புங்குடுதீவு மணியம்ஸ் ஸ்ரோர்ஸ் சுப்பிரமணியம் மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், பிரபல சமூகத்தொண்டர், வர்த்தகர் மறைந்த கருணாகரன் அவர்களின் அன்பு துணைவியாரும், சுகிர்தா, கலையரசி, முரளிதரன், நாவலன் (வேலணை பிரதேசசபை உறுப்பினர்), குணாளன் ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற துவாரகாதரன் மற்றும் வேந்தன், கார்த்திகா ஆகியோரின் மாமியாரும், பானுமதி, சற்குணம், சத்தியபாமா, இராமசந்திரன், நகுலேஸ்வரன், உலகேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும், ஜெயராஜசிங்கம், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், சபாரத்தினம் மற்றும், கலாநிதி, இந்திராணி, சித்ரா, காலஞ்சென்றவர்களான கருணாகடாட்சம், திருநாவுக்கரசு, கோபாலபிள்ளை, புவனேஸ்வரி, தியாகராஜா, வில்வரத்தினம் (கவிஞர்) மற்றும் பரமேஸ்வரி, லீலாவதி ஆகியோரின் மைத்துனியும், ஆசினி, ஹரிணி, எழினி, தமிழ்நிலவன், தமிழ்எழிலன், ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**தகவல்: குடும்பத்தினர்**
**கண்ணகை அம்மன் கோவில் வீதி,**
**பத்தாம் வட்டாரம் புங்குடுதீவு**

**நாவலன் : 077 716 8755**
**குணாளன் : 077 894 5856**

(CS 43126) (3/6)

### பயிற்சிநெறி

சாவகச்சேரி, பெப். 24

தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையால் நடத்தப்படும் பெண்களுக்கான இலவச தையல் பயிற்சிநெறி எதிர்வரும் மார்ச் மாதம் கொடிகாமம் மத்தி கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியில் 18 வயது தொடக்கம் 29 வயதுக்குட்பட்ட பெண்கள் கலந்துகொள்ளலாம்.

கலந்துகொள்ள விரும்புவோர் 0769318695 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி1-159)

### பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில்

## நோயாளர் விடுதிக் கட்டடம் சனிக்கிழமை திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 24

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அமைக்கப்பட்ட நோயாளர் விடுதி நாளைமறுதினம் சனிக்கிழமை மு.ப 10 மணிக்குத் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக டில்மா சிலோன் தேயிலை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், எம்.ஜெ.எவ். அறக்கட்டளை நிதியத்தின் அறங்காவலருமான டிலான் சி.பெர்னாண்டோ, சிறப்பு விருந்தினர்களாக எம்.ஜெ.எவ். அறக்கட்டளை நிதியத்தின் அறங்காவலர்களான கே.ஆர்.ரவீந்திரன், ரஞ்சன் ஆசீர்வாதம், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.மோகநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)



## இளையோருக்கு பயிற்சிப்பட்டறை

முல்லைத்தீவு, பெப். 24

முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம், சர்வோதய நிறுவனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், இளையோருக்கான பயிற்சிப்பட்டறை நேற்றுமுன்தினம் நாயாறு கடற்படைத் தளத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

நீர்நிலைகளால் ஏற்படும் இடர்களிலிருந்து மக்களை மீட்டெடுத்து, முதலுதவி சிகிச்சையளிக்கும் நோக்கில் 65 இளையோருடன் இந்தப் பயிற்சிப்பட்டறை ஆரம்பிக்கப்பட்டது.

பயிற்சிப்பட்டறை தேசிய இடர் முகாமைத்துவப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன் இலங்கை நீர்நிலைப் பாதுகாப்பு நிலையத்தின் அனுசரணையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதனால் ஆரம்பிக்கப்பட்டது. (ஒ-ரி1- 19)



## கசிப்புடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.24

கசிப்பு வைத்திருந்தனர் என்ற குற்றச் சாட்டில் நாரந்தனைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து அரைப் போத்தல் கசிப்பு கைப்பற்றப்பட்டது. சந்தேக நபர்களை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-23)

# தண்டனை பெற்றவர் நீதிமன்றில் அடாவடி

### மீண்டும் தண்டனை

யாழ்ப்பாணம்,பெப்.24

வழக்கொன்றில் தண்டனை பெற்றவர், நீதிமன்றில் கடமையில் இருந்த பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியதால், மீண்டும் தண்டனை பெற்றுள்ளார். இந்தச் சம்பவம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் இடம்பெற்றது.

ஊர்காவற்றுறை - காரைநகர் களபூமிப் பகுதியைச் சேர்ந்த நபரொருவர், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். சந்தேகநபருக்கு எதிரான வழக்கு, ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது, நபரொருவருக்கு முறையற்ற விதத்தில் இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில், குற்றவாளிக்கு ஒரு வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாதங்கள் சிறைத் தண்டனையும், ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

தொடர்ந்து குறித்தநபர் நீதிமன்ற வளாகத்தில் நீதிமன்ற மரபுகளுக்கு மாறாக உயர்ந்த தொனியில் கூக்குரலிட்டுள்ளார். நீதிமன்றில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர், அவரை அவ்வாறு நடந்துகொள்ள வேண்டாம் என்று கூறியுள்ளார். இதனையடுத்து தண்டனைக்கு உள்ளான நபர், பொலிஸ் உத்தியோகத்தரின்மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளார். இதனையடுத்து ஊர்காவற்றுறை பொலிஸாரால் உடனடியாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. குறித்த நபருக்கு நீதிமன்றால் 16 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதோடு, தாக்குதலுக்கு உள்ளான பொலிஸ் உத்தியோகத்தருக்கு இழப்பீடாக பத்தாயிரம் ரூபா செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. (ஒ-4-125)

## மூலப்பிரதி சமர்ப்பிப்பு

கோண்டாவில் கிழக்கு, ஸ்ரீ ஞானப்பழனி முருகப்பெருமான் மீது த.வ.தஜேந்திரனால் ஆக்கப்பட்டு வி.மதிசங்கரால் குறிப்புரை செய்யப்பட்ட "ஞானப்பழனி முருகன் காவியத்தின்" வரிவடிவ மூலப்பிரதி நேற்றுமுன்தினம் ஞானப்பழனி முருகன் திருப்பாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த காவியம் ஆலய வரலாறுகள், முருகப்பெருமானின் அற்புதங்கள் என்பன உள்ளடக்கியதாக 33 பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது. (ஒ-ரி1,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 24 . 01 . 1924

உதிர்வு 07 . 03 . 2021

## அமரர் நாகலிங்கம் பொன்னுத்துரை (V.N.P)

(இரத்தினபுரி நிவிந்திகல முன்னாள் பிரபல வர்த்தகர்,
முன்னாள் கமநல விதானை – அக்கராயன்குளம்)

திதி : 24.02.2022

அன்பு வழிகாட்டி அனைவரையும்
அரவணைத்த எங்கள் அன்புத் தெய்வமே!!!
ஆண்டு ஒன்று போனாலும் உங்கள் நினைவு
எங்கள் மனதை விட்டு என்றென்றும் போகாது
அன்பையும் பண்பையும் பொழிந்த நீங்கள்
ஒரு நொடியில் மறைந்ததேன்?
இனி எப்போ எம்முகம் பார்ப்பாய்?
உங்கள் புன்முகம் பார்க்க ஏங்கித்
தவிக்கின்றோம் அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



பிறப்பு 17 . 06 . 1948

இறப்பு 23 . 02 . 2022

## இரத்தினம் முருகானந்தன் (பாலு)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 527 கொழும்புத்துறை வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும கொண்ட முன்னைநாள் யாழ். பல நோக்குக்கூட்டுறவுச் சங்க வர்த்தக முகாமையாளரும், பிரபல நாடக ஆசிரியரும், முத்தையா வெதுப்பக ஸ்தாபகருமான இரத்தினம் முருகானந்தன் (பாலு) அவர்கள் நேற்று (23.02.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் கோணேஸ்வரி அவர்களின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான செல்வராசா அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மருமகனும் செல்வநாயகியின் பாசமிகு கணவரும், சேந்தன் (பிரான்ஸ்), நித்தியா (லண்டன்), நிசாந்தி (கனடா) அவர்களின் அன்புத் தந்தையாரும், சதீஸ் (லண்டன்), மோகனரூபன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அருஷன், அருண், நிருஷன், நமித்ரா ஆகியோரின் அன்புப் பேரனும், சிங்கராசா (டென்மார்க்), பகீரதன் (இத்தாலி), தெய்வநாயகி (பிரான்ஸ்), விக்கினேஸ்வரி, விஜயநிர்மலா (ஆசிரியர் புனித ஆன் றோ.த.க பாடசாலை நவாலி) ஆகியோரின் சகோதரரும், செல்வராணி, செல்வநாதன் (ஜேர்மனி), செல்வமாலினி (பிரான்ஸ்), செல்வவாணி (லண்டன்), கோகுலானந்தன் (ஆசிரியர்) லட்சுமிதேவன் ஸ்ரீபவானந்தன், உதயராணி வாலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், இராசரத்தினம் (ஓய்வுநிலை பிரதம தபால் அதிபர், திருகோணமலை) ஏரம்பு (பிரான்ஸ்) தவநேசன் (லண்டன்), குணபூசனி (ஜேர்மனி) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2022) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மனைவி - செல்வநாயகி

(CS 18430) (3/6)

## ஆப்கானிஸ்தானில் உணவுப்பஞ்சம்; 2500 தொன் கோதுமையை அனுப்பியது இந்தியா

ஆப்கானிஸ்தான், பெப்.24

ஆப்கானிஸ்தானில் நிலவிவரும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண மனிதாபிமான உதவிகளை இந்தியா வழங்கிவருகிறது. அதன்படி ஆப்கானிஸ்தா னுக்கு முதற்கட்டமாக 2ஆயிரத்து 500 தொன் கோது மையை இந்தியா அனுப்பியுள்ளது.

ஆப்கானிஸ்தானை தலிபான் பயங்கரவாதிகள் கைப்பற்றிய நிலையில், அங்கு மிகமோசமான உணவுப் பஞ்சம் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## உக்ரேனிலிருந்து 240 இந்தியர்கள் நாடு திரும்பினர்

புதுடில்லி, பெப்.24

உக்ரேனில் பதற்றமான சூழல் நிலவி வரும் நிலையில் உக்ரேனில் சிக்கியிருக்கும் இந்தியர்களில் 242 பேர் நேற்று தலைநகர் டில்லிக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இவர்களை அழைத்துவர கடந்த செவ்வாய்க்கிழமை காலையில் சிறப்பு விமானத்தை இந்திய அரசு அனுப்பியது.

அந்த விமானத்தில் முதலாவதாக 242 இந்தியர்கள் அழைத்து வரப்பட்டனர். (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பேச்சு, செயலில் கவனமாக இருக்க வேண்டிய நாள். பெண்கள் மூலம் இன்று நன்மை ஒன்றை எதிர்பார்க்கலாம். எதிர்பாலினத்தினிடம் கவனமாக இருக்க வேண்டும். அலைச்சல் ஏற்படலாம்.

**இடபம்:** பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை கிடைக்கும். குழந்தைகளுக்காக நீங்கள் படும்பாடு நற்பலன் அளிக்கும். காலையில் நல்ல செய்தி உங்களைத் தேடிவரும்.

**மிதுனம்:** வேலை தேடுவோருக்கு நல்ல செய்தி ஒன்று கிடைக்கும். நண்பர்களை சந்தித்து பழைய நினைவுகளை பேசி மகிழ்வீர்கள். சிறு மாற்றம் ஒன்று நிகழும்.

**கடகம்:** இன்று நீங்கள் எடுக்கும் விஷயம் நிச்சயம் வெற்றி பெறும். புதிய இடங்களில் முதலீடு செய்வதை ஒத்திப் போடுவது நல்லது. உங்களின் கடின உழைப்பு மட்டுமே வெற்றியைத் தரும்.

**சிம்மம்:** ஆன்மிக சிந்தனைகள் அதிகரிக்கும். சுறுசுறுப்பான நாள். வாழ்க்கைத்துணைக்கு அலுவலகத்தில் நன்மை ஒன்று காத்திருக்கிறது. எதிர்பாராத லாபம் வரும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி:** உங்களின் பிடிவாதத்தால் விரயம் ஏற்படாதபடி கவனம் தேவை. குடும்பத்தினருடன் அனுசரித்துச் செல்வீர்கள். பேச்சினால் நன்மை வரும். இன்று முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். மனக்குழப்பம் தீரும்.

**துலாம்:** பொறுப்பும், அதிகாரமும் உள்ள பதவி உங்களைத் தேடி வரலாம். தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். கோபம் குறையும். இன்று குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழல் நிலவும்.

**விருச்சிகம்:** சேமிப்பை அதிகரிப்பது நல்லது. நட்பு வட்டம் விரியும். பணியிடத்தில் மேலதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்யவேண்டாம். பிறருக்கு உதவி செய்து அவர்களது வாழ்த்தைப் பெறுவீர்கள்.

**தனுசு:** இன்று புதிய இனங்களில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். மற்றவர்களை அனுசரித்து சென்று மகிழ்ச்சி அடைவீர்கள். புதிய மாற்றத்தை எதிர்பார்க்கலாம். தாயின் அன்பைப் பெறுவீர்கள்.

**மகரம்:** எந்தவொரு செயல்களிலும் நேர்மையை பின்பற்றுவது நல்லது. உறவினர் இடையே ஏற்பட்டிருந்த மனக்கசப்பை நீக்குவீர்கள். ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும்.

**கும்பம்:** கோயில் திருப்பணிகளில் ஈடுபடுவதால் உங்களின் புகழ் கூடும். உல்லாசப் பயணம் ஒன்றால் மகிழ்ச்சி அதிகரிக்கும். குழந்தைப் பாக்கியத்துக்காக காத்திருந்தோருக்கு நற்செய்தி உண்டு.

**மீனம்:** புதிய வழியில் பணவரவு ஏற்படும். பணிச்சுமை குறையும். நண்பர்களை சந்தித்து பேசி மகிழ்ச்சி அடைவீர்கள். எந்தவொரு விஷயத்திலும் கவனமாக இருக்க வேண்டிய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத திருத்தச்சட்ட வரைவுக்கு எதிரான வழக்கு; அரசியல்வாதிகளுக்கு பாதகத்தை ஏற்படுத்திவிடலாம்



### கூறுகிறார் ஜனாதிபதி சட்டத்தரணியும் தமிழ் அரசுக் கட்சி பிரமுகருமான கே.வி.தவராசா

பயங்கரவாத தடைச்சட்டத்தின் திருத்த வரைவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின்மூலம், தற்போது சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நெருக்கடிக்குள் தள்ளப்படுவார்கள். இந்த வழக்கு வெற்றியடைந்தால், முன்னர் இருந்த மோசமான பயங்கரவாத தடைச்சட்டமே நடைமுறையில் இருக்கும் என எச்சரித்துள்ளார் ஜனாதிபதி சட்டத்தரணியும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொழும்பு கிளைத் தலைவருமான கே.வி.தவராசா.

பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டுமென்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும். என்றாலும், பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்கும் சூழல் இல்லாத சமயத்தில், புதிய திருத்தத்தில் சாதகமான அம்சங்களும் உள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.

42 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டுமென்பதில் மாற்றுக் கருத்து இல்லை. என்ன காரணத்துக்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதோ, அது 2009 இல் முடிவடைந்த பின்னரும் சட்டம் நீக்கப்படவில்லை. திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை. இது அடிப்படை உரிமைகளுக்கு முரணானது. சர்வதேச சமவாயத்துக்கும், அரசமைப்பின் பல உறுப்புரிமைகளுக்கும் முரணானது. இந்தச் சட்டத்தை அரசு சுயநலத்துக்காகவே பயன்படுத்தி வருகிறது. அரசுக்கு எதிராக கருத்துக்களை முன்வைப்பவர்களே இப்பொழுது குறிவைக்கப்படுகிறார்கள்.

தமிழர்களுக்கு எதிராக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இப்பொழுது தமிழ் பேசும் இனத்துக்கு எதிராகப் பாய்கிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக்கோரி தற்போது நடக்கும் கையெழுத்துப் போராட்டம் வரவேற்கப்பட வேண்டும். ஆனால், தற்போதைய சூழலில் இந்தச் சட்டம் நீக்கப்படுமா என்பது கேள்விக்குறியே. பயங்கரவாத தடைச்சட்ட திருத்தத்தின் மூலம், முழுமையான நிவாரணம் கிடைக்கவில்லையென்பது உண்மை. ஆனாலும் இன்னொரு வாதத்தையும் கவனத்தில் எடுக்க வேண்டும். தற்போதுள்ள விதிகளின் கீழ் 18 மாதம் ஒருவரை தடுத்து வைக்கலாம். குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பெறவே தடுத்து வைக்கிறார்கள்.

குற்றப்பத்திரம் தாக்கல் செய்யும்போது, குற்றஒப்புதல் வாக்குமூலம்தான் பிரதான சாட்சியாக முன்வைக்கப்படும். 95 வீதம் இதுதான் நடந்தது. 400 இற்கும் மேற்பட்ட அடிப்படை மனுக்களை எனது துணைவியார் கௌரிசங்கரி தாக்கல் செய்தார். அதில் 250 வழக்குகள் சித்திரவதைகள் தொடர்பானவை.

நீதிபதிகள் வழக்கை விசாரிக்கலாம். தண்டிக்கலாம் அல்லது விடுவிக்கலாம். பிணை வழங்கும் அதிகாரமில்லை. புதிய திருத்தத்தின்கீழ், தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 மாதங்களுக்குள் வழக்கு தாக்கல் செய்யவேண்டும். தடுத்து வைக்கப்படும் காலம் 18 மாதங்களில் இருந்து 12 மாதங்களாகியதில் எந்தப் பயனுமில்லை. ஆனால், இந்தத் திருத்தத்திலுள்ள சில நன்மைகளையும் குறிப்பிட வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்ட திருத்தத்துக்கு எதிராக இரண்டு மனுக்களை உயர்நீதிமன்றத்தில் இப்போது தாக்கல் செய்துள்ளனர். அம்பிகா சற்குணநாதனும், பாக்கியசோதி சரவணமுத்துவும் அவற்றை தாக்கல் செய்துள்ளனர். அந்த மனுக்களில், அடிப்படை உரிமைகளுக்கு எதிராக இந்தத் திருத்தம் உள்ளதால், மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் அல்லது சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்படவேண்டுமென கோரப்பட்டுள்ளது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையாலோ, சர்வஜன வாக்கெடுப்பாலோ இந்த சட்டம் நிறைவேற்றப்படாவிட்டால், இது நடைமுறைக்கு வராது. இந்தச் சட்டத் திருத்தம் சட்டமாகவில்லையென்றால், அதனால் அரசியல் கைதிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் இரண்டு விடயங்கள் உள்ளன. தடுப்புக்காவல் காலமும், சிறைச்சாலையில் தடுத்து வைக்கும் காலமும் உள்ளன. தற்போதைய திருத்தத்தின்படி நீதிபதி தடுப்புக்காவல் நிலையத்துக்குச் சென்று பார்வையிட வேண்டும். கைதானவர் தாக்கப்பட்டிருந்தாலும், அது வழக்குத் தீர்ப்பில் சாதகமான நிலைமையை ஏற்படுத்தும். தடுப்புக்காவல் காலத்தில்தான் சித்திரவதை செய்யப்பட்டு குற்றஒப்புதல் வாக்குமூலம் பெறப்படுகிறது. தடுப்புக் காவலில் எமது வாடிக்கையாளர் தாக்கப்பட்டது தெரிய வந்தால், நாம் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்து, தடுத்து வைக்கப்பட்டவரை மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தக் கோருவோம். அதில், தாக்கப்பட்டது உறுதியானால், வழக்குத் தீர்ப்பில் அது செல்வாக்குச் செலுத்தும். இப்படி எத்தனையோ வழக்குகளில் வெற்றியடைந்துள்ளோம். புதிய திருத்தத்தின்படி, தடுப்புக்காவலில் இருக்கும் போதே நீதிபதியிடம் முறையிட வாய்ப்பு ஏற்படும். பயங்கரவாத தடைச்சட்டத்தை நடைமுறைப்படுத்தியதில் இருந்து இன்று வரையான 42 வருடங்களில், நீதிமன்றங்களுக்கும், நீதிபதிகளுக்கும் பிணை வழங்கும் அதிகாரம் இருக்கவில்லை. பாதுகாப்பு அமைச்சரால் தடுப்புக் காவல் உத்தரவு வழங்கப்படுகிறது. சட்டமா அதிபரின் சம்மதமின்றி நீதிமன்றங்களால் பிணை வழங்கமுடியாது.

42 வருட பயங்கரவாத தடைச்சட்ட வரலாற்றில் 3 வழக்குகளில்தான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. 1999 ஆம் ஆண்டு - தற்போதைய கப்பிடல் தொலைக்காட்சியின் நிர்வாக இயக்குநர் பிணையில் விடுவிக்கப்பட்டார். பின்னர், 2021ஆம் ஆண்டு ரிஷாத் பதியுதீனின் சகோதரர் பிணையில் விடுவிக்கப்பட்டார். தற்போது, சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்த மூன்று வழக்குகளையும் தாக்கல் செய்தவர் கௌரிசங்கரி தவராசா.

இப்பொழுது மேல் நீதிமன்றத்துக்கும், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கும் பிணை வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கைதாகி 12 மாதங்கள் முடியும் நிலையில் வழக்கு தாக்கல் செய்யப்படாமல் இருந்தால், பிணை வழங்கக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யலாம். வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு சட்டமா அதிபரால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, ஒரு வருடத்துக்குள் வழக்கை விசாரிக்காவிட்டால், பிணை வழங்கும் அதிகாரம் மேல் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. வழக்கு தொடங்கினால் அவரை மீண்டும் சிறையில் வைக்கும் அதிகாரம் மேல் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

முன்னர் விசாரணைக்கு கால எல்லை இருக்கவில்லை. முன்னர் ஒருவரை கைது செய்தால் 5,6 வருடங்களாகும் விசாரணை முடிய. அதன் பின்னர் சட்டமா அதிபருக்கு கோவை அனுப்பப்பட்டு, வழக்கு தாக்கல் செய்ய 5, 6 வருடங்களாகும். அதன்பின்னர் வழக்கு விசாரணை முடிய மேலுமொரு 5 வருடமாகும். ஒருவருக்கு விடுதலையோ, தண்டனையோ கிடைக்க 15, 18 வருடங்களாகிறது. தற்போதைய புதிய திருத்தத்தின்படி, வழக்கு விசாரணை தினசரி நடத்தப்பட வேண்டும். வரலாற்றிலேயே தினசரி நடந்த ஒரேயொரு வழக்கு, 1982ஆம் ஆண்டு குட்டிமணி, தங்கத்துரை, தேவனுக்கு எதிரான வழக்கு. இதுதான் பயங்கரவாத தடைச்சட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட முதல் வழக்கு. 4 மாதங்களில் வழக்கு முடிந்தது.

தற்போதைய நிலையில் புதிய திருத்தத்தின் மூலம் 2 வருடங்களுக்குள் தீர்ப்பு வழங்கப்பட்டுவிடும். பத்திரிகையாளர் திசநாயகம் கடத்தப்பட்ட வழக்கில் ஒரு சம்பவம் நடந்தது. அவருடன் கடத்தப்பட்ட யசிகரன், வளர்மதியும் கைது செய்யப்பட்டனர். இதில் யசிகரன் தாக்கப்பட்ட தகவல் கிடைத்ததும், நாம் நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம். யசிகரன், வளர்மதியும் தாக்கப்பட்டதாக குறிப்பிட்டனர். திசநாயகம் தாக்கப்பட்டார். ஆனால் அமைதிகாத்தார். வழக்கில் யசிகரனும், வளர்மதியும் விடுதலையாகினர். அவர்கள் சுவிற்ஸர்லாந்து சென்றுவிட்டனர். திசநாயகத்துக்கு 20 வருடம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பிலேயே விடுதலையாகி அமெரிக்கா சென்றார்.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் கைது செய்யப்பட்டவர்களும், பின்னர் கைதான ஒரு சிலரும் அரசியல் கைதிகள் என்ற வகைக்குள் உள்ளனர். அந்த வகையில் 49 பேர் உள்ளனர். இவர்களில் 26 பேர் தண்டனை பெற்றவர்கள். 23 பேர் விசாரணையில் உள்ளனர். 2017ஆம் ஆண்டு சுமந்திரனை கொல்ல முயன்றதாக 19 பேர் கைதாகினர். பின்னர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பேஸ்புக்கில் எழுதினார்கள் என கைதானவர்களும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரத்திலும் 300 பேர் வரையில் கைதாகினர். தற்போது 375 - 400 பேர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இப்பொழுது பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக பேசும் தமிழ்த் தலைவர்கள் 2015ஆம் ஆண்டு அரசின் பங்காளிகளாக இருந்தனர். அப்போது பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்பொழுது பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கியிருக்கலாம் எனத் தெரிவித்தார். ■

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை எதிர்த்து நேற்றும் கையெழுத்துப் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப்.24

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்துச் செய்யக்கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் நேற்றும் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை 9மணியளவில் மல்லாகத்திலும் தொடர்ந்து 10 மணிக்கு தெல்லிப்பழையிலும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் தமிழ் அரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியினர் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர். (வ-23)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் **கந்தவனம் திருஅருள்ஜோதி**




25.01.2022 கனடாவில் காலமான அன்னாரின் 31ம் நினைவு நாள் சரசாலை தெற்கு, சாவகச்சேரி அவரது இல்லத்தில் 24.02.2022 நடைபெறவுள்ளது.

(CR 7932) (4/6)

தகவல்:- மனைவி-தி.பரமேஸ்வரி (கனடா)
மகன்-தி.சஞ்சீவ் (கனடா)
மற்றும்
உறவினர்கள் (அல்வாய், பருத்தித்துறை, சரசாலை, விடத்தற்பளை, மீசாலை)
கோவிற்குளம் (வவுனியா), கிளிநொச்சி (கரடிப்போக்கு)

தொடர்புகளுக்கு
077 958 7104

# கண்ணீர் அஞ்சலி



சங்க உறுப்பினரும் வரணி சமுர்த்தி வங்கி சமுர்த்தி அபிவிருத்தி அலுவலருமான
**திரு .வேலாயுதபிள்ளை குருபரன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**முருகர் வேலாயுதபிள்ளை**
கடந்த 12.02.2022 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

(CS 43127) (3.6)

தென்மராட்சி பிரதேச செயலக
ஊழியர் நலன்புரிச் சங்கம் சாவகச்சேரி

# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியர்
**திருமதி இராணிமலர் ராகவன்** அவர்களின்
பாசமிகு மாமியார்
## திருமதி துரையப்பா நளாயினி



**மண்ணில்** 14.05.1949
**விண்ணில்** 22.02.2022

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

(CR 7926) (3/6)

**பாடசாலைச் சமூகம்**
**யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்**

# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர்
திரு. உ. சிவகுமார் அவர்களின் அன்புத் தந்தையார்
## திரு. தம்பிப்பிள்ளை உத்தமசீலன்
அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS 18428) (3/6)


ஊழியர் நலன்புரிச்சங்கம்
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை

# ஆறு மாதங்கள் ஆகியும் ஆறாத் துயரில்

அமரர் **பேதுருப்பிள்ளை பிளமிங் (கரன்)**

**மண் மகிழ**
01.06.1974

**கண் நெகிழ**
24.08.2021



மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்று விட்டீர் கலையாத நினைவுகளுடன் காலத்தை கடந்து செல்கின்றோம்.

தவசிகுளம், மிருசுவில் (CS 18432) (3/6) குடும்பத்தினர்

# மாணவர்களுக்கு உதவ இராணுவத்தினர் தயார்

### கட்டளைத்தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.24

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களை, நாட்டின் சிறந்த பிரஜைகளாக உருவாக்குவதற்கு, இராணுவத்தினர் துணையிருப்பர் என்று 51 ஆவது படைக் கட்டளைத் தளபதி சந்தன விக்ரமசிங்க தெரிவித்தார்.

53 ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில், தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் 250 பேருக்கு, பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அன்சல் லங்கா நிறுவனத்தின் உதவியுடன் பாடசாலை மாணவர்களுக்கு காலணி மற்றும் சுகாதாரக் கையுறைகள் ஆகியன வழங்கப்பட்டன. (ஒ-4-20)

# கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அபிவிருத்தி உத்தியோகத்தகராகக் கடமையாற்றும் திருமதி சத்யன் கல்யாணி அவர்களின் அன்பு மாமனார்
அமரர் **ஆறுமுகம் சுந்தரலிங்கம்**
(ஓய்வு பெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்)
அவர்கள் நேற்று (23.02.2022) புதன்கிழமை காலமாகியதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(CR 7933) (4/6)

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறை.

# மரண அறிவித்தல்

**பிறப்பு** 27 . 02 . 1980



**இறப்பு** 22 . 02 . 2022

## செல்வி அருளானந்தம் ஜெகந்தினி (நிசா)

சிறுவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் ஜெகந்தினி 22.02 .2022 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அருளானந்தம் - மாசில்லாமணியின் மகளும், இதயதீபன் (தீபன் - இந்தியா), ஜெகந்தன் (ஜெகன் - ஆபிரிக்கா), நிலானி (நிலா - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு சகோதரியும், காஞ்சனா (ஆபிரிக்கா), சுரேஸ் (அவுஸ்திரேலியா), ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், மொறேனா (ஆபிரிக்கா) அன்பு மாமியாரும், அக்ஷரா, அக்ஷய், அபிக்ஷா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் புகழுடல் இன்று (24.02.2022) வியாழக்கிழமை காலை வீட்டில் இருந்து எடுத்து செல்லப்பட்டு 9.30 மணியளவில் பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பெரியவிளான் புனித யுவானியார் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்

**021 224 3925, 077 323 0107** (CS 18435 3/7)

தகவல்
குடும்பத்தினர்

# வவுனியாவிலும் போராட்டம்

வவுனியா, பெப்.24

பயங்கரவாதத்தடைச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியாவிலும் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக் கப்படவுள்ளது என தமிழரசுக்கட்சியின் வவுனியாக் கிளை அறிவித்துள்ளது. இது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் வவுனியாக் கிளை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியா மாவட்டத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை பழைய பேருந்து நிலையம், இலுப்பையடி, வைரவர்புளியங்குளம் சந்தி, குருமன்காடு சந்தி ஆகியவற்றிலும் செட்டிகுளம் பேருந்து நிலையத்திலும் நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்கு முன்பாகவும் காலை 8 மணியிலிருந்து கையெழுத்துப் போராட்டம் இடம்பெறும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குவதாக இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு சர்வதேச சமூகம் வலியுறுத்தவேண்டும் எனக் கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது- என்றுள்ளது. (வ-110)

# மரண அறிவித்தல்

**பிறப்பு** 17 . 08 . 1942



**இறப்பு** 22 . 02 . 2022

## திருமதி மாரிமுத்து தவமணி

சங்கானையைப் பிறப்பிடமாகவும் காரைநகர் மற்றும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாரிமுத்து தவமணி நேற்று முன்தினம் (22.02.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தவராசா மற்றும் யசோதா (ஆசிரியர் யா/ மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை) ஜனதா (ஆசிரியர், யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்) காலஞ்சென்ற அருள்ராசா மற்றும குகராசா (சுவிஸ்லாண்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிறேமச்சந்திரன், சுதேஸ், சுதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமியும், சாம்பவி, ஆஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (24.02.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக [illegible] இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடுவில் தெற்கு
சந்தியபுரம், சுன்னாகம் . (CS 18431 ) 3/7)

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை புவனகுமார்

சுதுமலை மானிப்பாயை பிறப்பிடமாகவும் கேரதீவு வீதி, நாவற்குழியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை புவனகுமார் அவர்கள் கடந்த (22.02.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மயில்வாகனம் வள்ளியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சுசிலாவதியின் அன்புக் கணவரும், செல்வகுமாரி, சாந்தகுமாரி, ஜெயகுமாரி, ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகரட்ணம் புஸ்பலீலாவதி காலஞ்சென்றவர்களான விமலாவதி, சந்திராவதி, இந்திராவதி, சிவபூலோகசுந்தரம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், கிறிஸ்கீசன், வாகீசன், லோகினி ஆகியோரின் பெரிய தந்தையும், நாகதீபனின் மாமனாரும், காவியாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாவற்குழியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (24.02.2022) வியாழக்கிழமை நடைபெற்று முற்பகல் 11.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 18442) (4/6)

# தடுப்பூசி செலுத்தல் வவுனியாவில் மந்தம்

## அடைவு மட்டத்தை எட்டுமாறு பணிப்பு



**வவுனியா, பெப்.24**

**வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தடுப்பூசியின் மூன்றாம் டோஸ் செலுத்தும் நடவடிக்கைகள் மந்தகதியில் இடம்பெறுகின்றது -என்று சுகாதார சேவைகள் பணிப்பாளரால், வவுனியா பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.**

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்படும் மூன்றாம் கட்ட தடுப்பூசி, சனத்தொகை அடிப்படையில் 29.6 வீதமாகவே காணப்படுகின்றது.

இது எதிர்மறையான விளைவுகளை மாவட்டத்துக்கு மட்டுமன்றி நாட்டுக்கே ஏற்படுத்தும்.

எனவே ஜூலை மாதத்துக்குள் தடுப்பூசி பெற்றவர்களின் அடைவு மட்டம் அதிகரிக்காதுவிடின், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் கணக்காய்வாளரின் விசாரணைக்குப் பதிலளிக்க வேண்டியேற்படும்.

எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதிக்கு முன்பாக, வவுனியா மாவட்டத்தில் தடுப்பூசி பெற்றவர்களின் எண்ணிக்கை 45 வீதமாக அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும். தொடர்ச்சியாக வாராந்தம் 10 வீதத்தால் அதிகரிக்கப்படவேண்டும் -என்றுள்ளது. (ஓ-4-110)

உ
சிவமயம்

## தசாக கிருஹக்ஷ அழைப்பு

**அமரர். பிரம்மஸ்ரீ. வைத்தியநாத சர்மா வெங்கடாசல ஐயர்**

நிகழும் பிலவ வருடம் மாசிமாதம் 4ம் நாள் (16-02-2022) புதன்கிழமை
எமது குடும்பத்தலைவரும், நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிராமிய வங்கியின் ஓய்வு பெற்ற முகாமையாளரும்,
கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோவில், காட்டுப்புலம் முருகமுமூர்த்தி கோவில் ஆகியவற்றின் பரம்பரை குருவுமாகிய
**பிரம்மஸ்ரீ வை.வெங்கடாசல ஐயர் (கோபால ஐயர்)** சிவபதம் எய்தினார்.
அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்
வருகை தந்து அவரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், விருந்துபசாரத்திலும் பங்குபற்றவும்.

| | | | |
|---|---|---|---|
| மாசி 13ம் நாள் | (25-02-2022) வெள்ளிக்கிழமை | காலை 09.00 மணிக்கு | - தசாகம் |
| மாசி 14ம் நாள் | (26-02-2022) சனிக்கிழமை | காலை 09.00 மணிக்கு | - ஏகோதிஸ்டம் மாசியம் |
| மாசி 15ம் நாள் | (27-02-2022) ஞாயிற்றுக்கிழமை | காலை 09.00 மணிக்கு | - சபீண்டீகரணம் |
| மாசி 16ம் நாள் | (28-02-2022) திங்கட்கிழமை | காலை 08.00 மணிக்கு | - கிரகயக்ஞம் |

தொடர்ந்து விருந்துபசாரம் இடம்பெறும்

இல. 24-2/5, கல்பொத்த வீதி, கொழும்பு-13.
தொலைபேசி இல.: 0779 789559, 0772269643

குடும்பத்தினர்

(CS18444) (3/6)

# அபிவிருத்தியைப் பயன்படுத்தி அரசியல் செய்கிறார் தவிசாளர்

## கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

கொடிகாமம், பெப்.24

அபிவிருத்தியைப் பயன்படுத்தி கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன் அரசியல் செய்கிறார் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதேசசபை உறுப்பினர் சிவக்கொழுந்து புவனேஸ்வரன் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது;

கடந்த காலங்களில் இடம்பெற்ற சபை அமர்வுகளில் நான் முன்வைத்த விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதில் தவிசாளர் பின்னடித்துவருகிறார்.

ஆனால், தான் சார்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் வட்டார அபிவிருத்தியில் அதிக கரிசனை செலுத்துகிறார்.

போரால் பேரழிவைச் சந்தித்த மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றவே எமக்கு வாக்களித்தார்கள்.


சபையின் முதலாவது அமர்வில் நாங்கள் கட்சி பேதங்களை மறந்து இணைந்து செயற்பட்டு சாதிப்போம் என்றேன்.

ஆனால், செயற்பாடுகள் அவ்வாறு அமையவில்லை. பிரேரணைகள் முன்மொழிந்தால் அது நிறைவேற்றப்படுவதில்லை. வாக்குவாதத்தில் நேரம் செலவாகிறது - என்றார். (வ-159)

## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் சண்முகராஜா

**(ஓய்வு பெற்ற ஊழியர் இரசாயனத்தொழிற்சாலை பரந்தன்)**



சுன்னாகம் பருத்திக்கலட்டியை பிறப்பிடமாகவும், ஏழாலை கிழக்கை நிரந்தர வசிப்பிடமாகவும் கிளிநொச்சி தொண்டமான் நகரில் தற்காலிகமாக வசித்தவருமான தர்மலிங்கம் சண்முகராஜா அவர்கள் நேற்று (23.02.2022) புதன்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தருமலிங்கம் மாணிக்கம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னத்தங்கச்சி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், நித்தியலட்சுமியின் ஆருயிர்க்கணவரும், கௌசலா (முன்னாள் ஆசிரியர், தற்போது லண்டன்) காலஞ்சென்றவர்களான சுதர்மன், துவாரகா மற்றும் மதுரா (யூனியன் அசூரன்ஸ் நிதி ஆலோசகர் யாழ்ப்பாணக்கிளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜிதரனின் (லண்டன்) அன்பு மாமாவும் அறிவகனின் (லண்டன்), அன்புத்தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணி அளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காடாகரம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
ஏழாலை கிழக்கு,
ஏழாலை.
021 205 9405
076 622 8318

(CS 18443 (4/6)

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
## 35ஆவது பட்டமளிப்பு வைபவம்

1. கலைமாணி
2. வணிகமாணி
3. வியாபார முகாமைத்துவமாணி
4. நடனமாணி
5. இசைமாணி

மேற்படி பட்டக் கற்கைநெறிகளில் 02.09.2017 இற்கு பின்பும் 23.01.2021 திகதிக்கு முன்பும் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்கும் முகமாக பட்டமளிப்பு வைபவத்தினை 05.03.2022 (சனிக்கிழமை) காலை 9.00 மணி தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உள்ளக விளையாட்டரங்கில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வைபவத்திற்கான பட்டஅங்கி மற்றும் நுழைவுச்சீட்டுகளை 26.02.2022 (சனிக்கிழமை), 27.02.2022 (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 28.02.2022 (திங்கட்கிழமை) ஆகிய தினங்களில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.00 மணி வரை) திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் மாணவர் பதிவேட்டு புத்தகத்தினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளமுடியும். அத்துடன் இணையவழி மூலம் வேண்டுகோள் படிவத்தினை (Supplication Form) சமர்ப்பித்தவர்கள் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை சமர்ப்பித்தல் அவசியமானதாகும்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

இணையத்தள முகவரி : http://www.codl.jfn.ac.lk/

24.02.2022 (CR 37138) (3/6) பதிவாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி விழா வாழ்த்துகள்

24.02.2022

மகத்துவமான சேவைகள் பலவாற்றி மணிவிழாக் காணும் இணுவில் மைந்தனும் அகில இலங்கை சமாதான நீதவானும் பட்டயப் பொறியியலாளருமான

## எந்திரி வேலாயுதபிள்ளை பிரேமகுமார்

(மாகாணப் பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், வடக்கு மாகாணம்)

அவர்களுக்கு எமதினிய மகிழ்வான வாழ்த்துகள்



இணுவில் மண்ணில் பிறந்து
இணுவில் மத்திய கல்லூரியில் தவழ்ந்து
கொக்குவில் இந்துக் கல்லூரியில்
கொடி கட்டிப் பறந்து
பேராதனைப் பல்கலைக்கழகத்தில்
பேரும் பட்டமும் பெற்றவரே

நாணயக்கார நிறுவனத்தில்
நாணயமான பொறியியலாளனாய் இறங்கி
மகத்துவம் மிக்க சேவையாற்ற
மகாவலியில் இணைந்து கொண்டவரே

நீர்ப்பாசனத் திணைக்களத்தில்
நீர்ப்பாசனப் பொறியியலாளராக கால்பதித்து
நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம் – பிரதி
நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம்
நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகமென தடம் பதித்தவரே

சிரேஷ்ர மற்றும் பிரதம நீர்ப்பாசனப் பொறியியலாளராய்
சிரத்தைகொண்டு முன்னேறி
சிகரம் தொட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளராகி
சிந்தை மகிழ பணிப்பாளர் ஆனவரே

திடகாத்திரமான நல்லெண்ணத்துடன்
திட்டங்களுக்குள் நுழைந்து
திட்டப்பணிப்பாளராக இரணைமடுவில் உயர்ந்து
திறம்பட செயற்பட்ட செயல்வீரரே

நல்ல மனம் கொண்டு நல்லென செய்திட நாடிடும் தாம்
நலம் பெற வாழ நயம்பட வாழ்த்துகிறோம்
புதுமைகள் படைத்திட புத்வேகத்துடனும் புத்துணர்ச்சியுடனும்
புன்னகையுடன் புதிதாய் புறப்படுங்கள்

பொறியியல் பாதையில் தடம் பதித்து. உன்னத சேவையாலும் உயரிய செயலாலும் உயர்ந்து நிற்கும் எமது மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் என்றும் நலமுடனும் வளமுடனும் மென்மேலும் பதவி உயர்வு பெற்று வாழ அறுபதாவது அகவை தினத்தில் மனமுவந்து வாழ்த்துகின்றோம்

Congratulations

வாழ்த்துவோர்
உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
நீர்ப்பாசனத் திணைக்களம், வடக்கு மாகாணம்.

(CR 37136) (3/6)


*யாழ்....*

நடைபெறும்.

4ஆம் திகதி முதல் அமர்வு காலை 9 மணிக்கும், இரண்டாம் அமர்வு மு.ப. 11.30 மணிக்கும், மூன்றாம் அமர்வு பிற்பகல் 2.30 மணிக்கும் நடைபெறும்.

5 ஆம் திகதி முதல் அமர்வு காலை 9 மணிக்கும், இரண்டாம் அமர்வு பிற்பகல் 1 மணிக்கும் இடம்பெறும் என்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், பேரவை

உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (எ-ரி1)

*'காரைநகர்...*

சிதம்பரம் அறங்காவலர் முருகேசு சுந்தரலிங்கம் நேற்றுக் காலமானார்.

இவர் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், திண்ணபுரம் சிவன் கோயில் ஆதீனகர்த்தாவுமாவார். (எ-இ)


## பெயர் மாற்றம்

வைரமுத்து செல்வபதி செந்தாமரை ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை வைரமுத்து செல்வவதி என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் செல்வவதி என்றே கையொப்பம் இட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(CHA 684) (3/6) செல்வவதி

## அரசியல் விஞ்ஞானம்

A/L 2022/2023 பிரிவுகள் மானிப்பாய் BITSMANS கல்வி நிலையத்தில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. சனி மற்றும் ஞாயிறு காலை 8.00 - 10.00

உங்கள் அனுபவ ஆசான்
G.குணசீலன்
T.P - 077 493 9688

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை - காங்கேசன்துறை
## கீரிமலை சிவராத்திரி தினத்திற்கான (01.03.2022) தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் ஏலத்தில் வழங்கல்.

கீரிமலை சிவராத்திரி தினத்திற்கான உற்சவகால தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 25.02.2022 வெள்ளிக் கிழமை காலை 09.30 மணிக்கு முன்பாக தெல்லிப்பளை உபஅலுவலகத்தில் ரூபா 200.00 கட்டணம் செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். பகிரங்க ஏலம் 2022.02.25 ஆம் திகதியன்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் 10.00 மணிக்கு கீரிமலை பேரூந்து நிலையத்தில் நடைபெறவுள்ளது.

- ➢ சித்திபெற்ற கேள்வித்தாரஉகள் உடனடியாகவே அதற்கான குத்தகைப்பணம் முழுவதையும் செலுத்துவதுடன் வியாபார உரிமத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- ➢ ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும் உற்சவ காலத்துக்கு பிரதேச சபையால் வழங்கப்படும் கடைகள் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப் பட்ட இடங்களிலோ சபையின் அனுமதியின்றி வியாபாரம் மேற்கொள்ள முடியாது.
- ➢ உணவு கையாளும் நிலையங்கள் மேலதிகமாக சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் அனுமதியினைப் பெற்றுக்கொண்ட பின்னரே வியாபாரம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.
- ➢ பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.
- ➢ Covid 19 சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றல் வேண்டும்.

சோமசுந்தரம் சுகிர்தன்
24.02.2022 தவிசாளர்,
(CR 37134) (3/6) வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.

# உடனடி வேலைவாய்ப்பு

கொழும்பில் உள்ள Port Access ELEVTED Highway Project - CCECC HPRB - HNRBI Joint Venture (PVT) LTD க்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- ❖ **Bar Benders** (இரும்பு, ஒட்டுவேலை செய்வோர்)
- ❖ **Carpenters** (தச்சுத்தொழிலாளி)
- ❖ **Labours** (கூலித்தொழிலாளி)

நேர்முகத் தேர்வு 25.02.2022 வெள்ளிக் கிழமை காலை 9.00 - 12.00 மணி வரை US Hotel (PVT) Ltd No. 855, Hospital Road, Jaffna நடைபெறும்.

தொடர்பு
077 497 5787, 077 258 7189

## இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

நடாத்தும்

# புத்தகக் கண்காட்சி







இடம்: ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபம், நல்லூர்.
காலம்: 25.02.2022 முதல் 27.02.2022 வரை
காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை

விசேட விலைக்கழிவு 20% - 30%


இந்நிகழ்விற் கலந்து பயன்பெறுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 09 - 03 - 1940



இறப்பு 23 - 02 - 2022

## ஆறுமுகம் சுந்தரலிங்கம்

(ஓய்வுபெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்)

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சுந்தரலிங்கம் அவர்கள் நேற்று (23.02.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் குகதேவியின் அன்புக் கணவரும் தயாளன், சத்யன், (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கல்யாணியின் (சுகாதாரப் பணிமனை பருத்தித்துறை) பாசமிகு மாமனாரும் சபிசனின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், இந்திராணி மற்றும் அல்லிராணி, புஷ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியை நேற்று (23.02.2022) கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.


மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(CS 18433) 93/6)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 - 12 - 1952



மறைவு 23 - 02 - 2022

## செல்லையா வேலாயுதபிள்ளை

[பட்டு மாமா]

சரவணை கிழக்கு 9 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா வேலாயுதபிள்ளை (பட்டு மாமா) நேற்று (23.02.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா பூரணம் தம்பதிகளின் மகனும் காலஞ் சென்ற கந்தையா இராசம்மாவின் மருமகனும், இராஜலட்சுமியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான பால சுப்பிரமணியம், கோவிந்தராசா மற்றும் பரமேஸ்வரி, தியாகராசா ஆகியோரின் சகோதரனும், ஶ்ரீகரன், ஶ்ரீமாலதி, ஶ்ரீமதி, ஶ்ரீசாரதா ஆகியோரின் அன்பு தந்தையும், அஜந்தா, விஜியதீபன், சசிகுமார், கரிகாலன் ஆகியோரின் அன்பு மாமனும், ரிஷாந், திஷாளினி, டினுஜன், விதுஜன், கஸ்தூரி, நிஷாஜினி, தருண், சரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2022) வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புண்ணம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 690 4715

(CS 18438) (3/6)

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 18 - 05 - 1952



இறப்பு 22 - 02 - 2022

## செல்லத்துரை இந்திரகேஸ்வரன்

(சந்திரன்)

யார்வத்தை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இந்திரகேஸ்வரன் நேற்று முன்தினம் (22.02.2022) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பார்வதியம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான அப்பையா காமாட்சிப்பிள்ளை தம்பதிகளின் மரு மகனும், காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும் வைகுந்தன் (சாரதி பிரதேச வைத்தியசாலை கோண்டாவில்), அனோஜா, ரஜிந்தா (பிரான்ஸ்) காலஞ் சென்ற அருள்தாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுஜித்தா, அஜந்தன் (பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்துஜா, அக்ஷயா, அனிஷ், அபிஷா, கபிஷ், சந்தோஷ், ஆகியோரின் அன்புப் பேரனும், நாகராஜா, நகுலேஸ்வரி, காலஞ்சென்ற நாகேந்திரன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2022) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS18436)

யார்வத்தை,
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை
077 166 9267

தகவல்:
குடும்பத்தினர்
இ.வைகுந்தன் (மகன்)

# மரண அறிவித்தல்



## திருமதி. பத்மநாதன் நாகம்மா [தவம்]

மீசாலை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், ஆத்திசூடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்நாதன் நாகம்மா (தவம்) நேற்று முன்தினம் (22.02.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி சின்னாச்சி தம்பதியினரின் அன்பு புதல்வியும் காலஞ்சென்ற தம்பையா பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தில்லையம்பலம், சண்முகம் ஆகியோரின் சகோதரியும், காராளசிங்கம், காலஞ்சென்றவர்களான துரைநாதன், பரமேஸ்வரி (ராணி) மற்றும் வடிவம்மா (ராசாத்தி), நாகேஸ்வரி (பேபி), தங்கேஸ்வரி (பவுன்), காலஞ்சென்ற வள்ளியம்மா செல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் குலகுணவாணி (பிரான்ஸ்), நிலவன் (ஜேர்மன்), உகனபாலா, நாககுலவாணி (அபிவிருத்தி உத்தியோகத்தர், கட்டட திணைக்களம் யாழ்ப்பாணம்), பிரகாஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பரமநாதன் (பிரான்ஸ்), கலாரஞ்சினி (ஜேர்மன்), காலஞ்சென்ற புஸ்பகாந்தி மற்றும் உதயகீதன், ஜனனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், சிஜித்திரா (அபிவிருத்தி உத்தியோகத்தர் கிளிநொச்சி) ஜிகிர்தன் (பிரான்ஸ்), கஜானா, கபிஷா (வவுனியா பல்கலைக்கழகம்) டக்ஷன், தினோஷனா, அபிஷனா, சஞ்சிகா, பிரித்திகா, ஜென்சிகா, மேனகலன், தர்ஷிகன், மேனகன் கிருஷ்ணராஜா, சிந்துஜா, ஆகியோரின் அன்பு பேர்த்தியும் பிரியஷின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது மரண சாசனத்தின்படி நேற்று (23.02.2022) அதிகாலை 5.30 மணி யளவில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் ஒப்படைக்கப்பட்டது என்பதனை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

56/22, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்

(CCS 43116) (3/6)

தகவல்
குடும்பத்தினர்
074 144 4631

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழ்...

நேற்றுக்காலை முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம் என்று அவர்கள் சிறைச்சாலைப் பொறுப்பதிகாரிக்குக் கடிதம்மூலம் அறிவித்துள்ளனர்.

இரத்தினசிங்கம் கமலாகரன், வைத்திலிங்கம் நிர்மலன் மற்றும் பத்மநாதன் ஐங்கரன் ஆகியோரே உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கரும்புலிகள் தினத்தை நினைவுகூர முயன்றமை மற்றும் தீய செயல்களை ஏற்படுத்தும் பொருட்டு வெடிபொருள் தயாரிப்புக்கு உதவியமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் இரத்தினசிங்கம் கமலாகரன், வைத்தியலிங்கம் நிர்மலன், நல்லதம்பி நகுலேஸ்வரி மற்றும் பத்மநாதன் ஐங்கரன் ஆகியோர் 2020ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3 மற்றும் 6ஆம் திகதிகளிலும், 2021ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதியும் இவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளில் வைத்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அதேவேளை, சிறைச்சாலையில் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தும் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக, அவர்களின் உறவினர்கள் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்றுக்காலை முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

மனிதாபிமான அடிப்படையில் கைதிகளை விடுவிக்க வேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் போராட்டம் நடத்திவருகின்றனர். (அ-எ-26-125)

## நீதிகோரி...

- இவ்வாறு எதிரணி ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய எதிரணி கொறாடாவான லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டு மக்கள் இன்று அனைத்து வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எந்தவிதத்திலும் நிவாரணம் வழங்கப்படுவதில்லை. சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸார் மற்றும் நீதித்துறைக் கட்டமைப்பின் செயற்பாடுகள் தொடர்பில் பேசுவதற்கான உரிமை நாடாளுமன்றத்துக்கு இருக்கின்றது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்காது என்று பேராயர் குறிப்பிட்டுள்ளார். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் உள்நாட்டில் நீதி கிடைக்காது என்று பேராயர் கருதுகின்றார். இது தொடர்பில் நாடாளுமன்றம் வெட்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல இந்த விவகாரம் தொடர்பில் என்ன செய்வது என்று நாடாளுமன்றம் ஊடாக ஆராயப்பட வேண்டும்.

1989 ஆம் ஆண்டு நடந்த சிற்சில சம்பவங்களுக்கு அப்போதைய அரசு பொறுப்புக்கூறவில்லை என்று கூறி, தற்போதைய பிரதமர் அன்று ஜெனிவா சென்றார். இன்று மாற்றுவழி இல்லாமையால்தான் பேராயரும் சர்வதேசத்தை நாடுகின்றார். இதனால் எமது நாட்டுக்குத் தாக்கம் ஏற்படும். அதனால் நாடாளுமன்றம் ஊடாக வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும். உள்நாட்டில் நீதி கிடைக்காவிட்டால் சர்வதேசத்தை நாடுவதில் தவறில்லை என்பதையும் கூறியாக வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளது. எமது நாட்டில் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றது. இந்த விவகாரத்தால் சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது-என்றார். (அ-எ-44)

## ஒமிக்ரோன்...

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்டத்தில் 14 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அதேவேளை ஒமிக்ரோன் தொற்று ஏற்பட்ட மூவர் மாவட்டத்தில் உயிரிழந்துள்ளனர்.

பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிப்பதுடன், பூஸ்டர் தடுப்பூசிகளை ஏற்றித் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றவர்களில் 55.5 வீதமானோர் பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றியுள்ளனர். பூஸ்டர் தடுப்பூசியை 70 தொடக்கம் 75 வீதமானவர்கள் ஏற்றிக்கொண்டால் மட்டுமே, தொற்றின் சங்கிலியை எம்மால் உடைக்க முடியும்.

பாடசாலை மாணவர்களில் இதுவரை 12 ஆயிரத்து 649 பேர் முதலாவது தடுப்பூசியை ஏற்றிக்கொண்டுள்ளனர். 16 தொடக்கம் 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான இரண்டாவது தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் முதலாம் திகதி மகா சிவராத்திரி நிகழ்வுகள் திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறவுள்ளன. அதற்கு வருவோர் கட்டாயம் தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டிருக்க வேண்டும். பூரணமாகத் தடுப்பூசி பெற்றிருக்க வேண்டும் என்பது, ஒருவர் இரண்டாவது தடுப்பூசியை ஏற்றி இரு வாரங்கள் கழிந்திருக்க வேண்டும். இரண்டாவது தடுப்பூசியை ஏற்றி மூன்று மாதங்களுக்கு மேற்பட்டிருந்தால் கட்டாயம் மூன்றாவது அல்லது பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டிருக்க வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் இந்த ஆண்டு 689 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதுவரை மன்னார் மாவட்டத்தில் 3 ஆயிரத்து 872 பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் இதுவரை 39 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் - என்றார். (அ-எ-213)

## இன்றும்...

அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏ.பி மற்றும் சி வலயங்களுக்கு 4 மணித்தியாலங்கள் 40 நிமிடங்களும், ஏனைய வலயங்களுக்கு 4 மணித்தியாலங்கள் 30 நிமிடங்களும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு அமைய, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்வெட்டுக்கான அனுமதியை வழங்கியுள்ளது என்று ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார். (அ-எ-இ)

## கள்ள...

மௌனம் காக்கின்றார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் சாடியது.

நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவா திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது. தமிழ் அரசியல் கைதிகள் சிலர் விடுவிக்கப்படுகின்றனர். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திகள் நடைபெறுகின்றன என்ற விம்பத்தை உருவாக்க அரசு முயற்சிக்கின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத் திருத்தம் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வியாக்கியானம் வழங்குகின்றார். புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது ஓட்டைக் குடத்தில் நீர் நிரப்புவதைப் போன்றதாகும். எந்த மாற்றமும் வரப்போவதில்லை.

அரசமைப்பில் உள்ள விடயங்கள் பாதுகாக்கப்படும் என்று ஆட்சியாளர்கள் உறுதியளிக்கின்றனர். ஆனால், அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தம் எவ்வாறு கையாளப்படுகின்றது? அதைச் சின்னாபின்னமாக்கியுள்ளனர்.

பேரினவாத நிலைப்பாட்டில் இருந்த சம்பிக்க ரணவக்க, அநுரகுமார திஸாநாயக்க போன்றவர்கள் 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் உள்ளனர். ஆனால் பிராந்தியங்களின் ஒன்றியங்களின் ஒன்றியம் யாப்பை உருவாக்கிய ஜி.எல்.பீரிஸ் கள்ள மௌனம் காக்கின்றார். இலங்கை சுபீட்சமான நாடாக மாற வேண்டுமானால் முதலில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் - என்றார். (அ-எ-44)

## இந்திய...

மீன்பிடியில் ஈடுபடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று நடத்தப்பட்டது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய இணைப்பாளர் ஹர்மன் குமார தலைமையில் கொழும்பு ரயில்வே நிலையத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலை உடனடியாக நிறுத்தவேண்டும், எங்களது கடல் வளத்தை நாமே ஆளவேண்டும், கடல் வளத்தைச் சூறையாடும் நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பன போன்ற கோஷங்களுடன் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்த விடயத்தில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மௌனம் காப்பது ஏன்? என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேள்வி எழுப்பினர். (எ-இ)

## வடக்கில்...

தொடர்ச்சியாக வடக்குக்கான எரிபொருள் பவுஸர்களும் வருகின்றன. எனவே எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வீணாக வரிசையில் நிற்கவேண்டாம் - என்று, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய அலுவலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் எரிபொருளுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் வரிசையில் காத்திருந்து எரிபொருளை நிரப்பிச் சென்றனர். யாழ்ப்பாணத்தில் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் தீர்ந்து விட்டதாகவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில்கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'வடக்குக்கான எரிபொருள் விநியோகத்தில் இதுவரை எந்தத் தடங்கலும் ஏற்படவில்லை. எமக்கான எரிபொருள் ஏற்றிய பவுஸர்கள் தென்னிலங்கையிலிருந்து இரவு 10 மணியளவில் புறப்பட்டால் யாழ்ப்பாணத்தை வந்தடைய மதியம் 12 மணியாகும். அதனால் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் தீர்ந்து விட்டதாக காட்சிப்படுத்தியிருந்தார்கள். அதுவும் இரண்டு மணித்தியாலங்களுக்கு மாத்திரம்தான் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. பின்னர் எரிபொருள் பவுஸர் வந்ததும் அந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களாலும் எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. போதுமானளவு எரிபொருள் வடக்கில் கையிருப்பில் உள்ளதால் மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நின்று நேரத்தை வீணாக்க வேண்டாம்' - என்றார் அந்த உயர் அதிகாரி. (ஓ-5)

## போர்க்குற்ற...

-இவ்வாறு இறுதிப் போரை வழிநடத்திய இலங்கை இராணுவத் தளபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவில்லை. போர்க் குற்றச்சாட்டுக்களில் இருந்து படையினரை மீட்டெடுக்க முதலில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு அச்சமின்றி முகங் கொடுக்க வேண்டும். எதுவும் செய்யவில்லை என ஒளிவதில் பயனேதும் ஏற்படப் போவதில்லை. எவரேனும் தவறிழைத்திருந்தால் தேசிய பொறிமுறையில் அவருக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும். இதை நாம் செய்யாமையால் சட்டபூர்வமான போரை முடித்தவர்கள் கூட போலிக் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காக வேண்டியுள்ளது. இது கவலைக்குரிய விடயம்.

மனித உரிமை ஆணையாளருக்கு நாம் அஞ்சவில்லை. ஆயிரக்கணக்கில் சாட்சியங்களை திரட்டியுள்ளாராம். படையினருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்களில் 99 வீதமானவர்கள் புலி ஆதரவாளர்கள் என்பதை அவருக்கு நினைவூட்ட விரும்புகின்றோம். இனப்படுகொலை நடந்துள்ளது என்பது அப்பட்டமான பொய். புலிகள் பணயக் கைதிகளாக வைத்திருந்த மக்களைத் தியாகங்களுக்கு மத்தியில் படையினர் மீட்டனர். சர்வதேசச் சட்ட திட்டங்களுக்கு அமையவே நாம் போரிட்டோம். பின்களத்தில் இருந்த ஓரிருவர் தவறிழைத்திருக்கலாம். எனக்கும் அந்தச் சந்தேகம் இருக்கின்றது. அது தொடர்பாகத் தேடிப்பார்க்கலாம். அப்போதுதான் படையினரின் நன்மதிப்பைக் காத்துக்கொள்ள முடியும் - என்றார். (அ-எ-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பலதார திருமணங்களை நீக்கினால் பெரும் சிக்கல்

## நீதி அமைச்சரின் முன்மொழிவுக்கு அமைச்சரவையில் கடும் எதிர்ப்பு

**கொழும்பு, பெப்.24**

**இஸ்லாமியர்கள் நீண்டகாலம் பின்பற்றும் சட்டங்களில் நீதியமைச்சரால் முன்மொழியப்பட்ட திருத்தங்களுடனான பத்திரமொன்றுக்கு அமைச்சரவையில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கடந்த ஆண்டு முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் சட்ட சீர் திருத்தங்களுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது. அவற்றில் செய்யக்கூடியவற்றை விளக்கி , அமைச்சரவைப் பத்திரமொன்றை நீதியமைச்சர் கடந்த அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

சட்ட ரீதியான திருமணங்களுக்கான வயதெல்லையை 18 வருடங்களாக உயர்த்துதல், திருமணப் பதிவு ஆவணத்தில் மணப்பெண் கையெழுத்திடுவதைக் கட்டாயமாக்குதல், பலதார திருமணங்களை இல்லாதொழித்தல் மற்றும் காதி நீதிமன்ற முறைமையை அகற்றுதல் ஆகிய விடயங்களில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்று முன்னதாக வலியுறுத்தப்பட்டிருந்தன.

அவற்றில் பலதார திருமணங்கள், காதி நீதிமன்ற முறைமை ஆகியவற்றை நீக்கினால், முஸ்லிம் சமூகத்தினர் மத்தியில் சர்ச்சைகள் ஏற்படலாம் என்று தெரிவித்த நீதியமைச்சர், செய்யக்கூடிய திருத்தங்களை அமைச்சரவையில் முன்வைத்தார். இதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கடும் கண்டனத்தை வெளியிட்டார். இஸ்லாமியர்களுக்கென தனிச்சட்டம் இலங்கையில் இல்லையென்று ஆவேசமாகத் தெரிவித்தார். இஸ்லாமியர்கள் இந்த நாட்டின் பொதுவான சட்டத்தைப் பின்பற்றவேண்டும். பல தரப்புகளுக்காக பல சட்டங்கள் இருக்கமுடியாது என்றும் அவர் தெரிவித்தார். இதனையடுத்து, அமைச்சரவையில் கடும் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. ஞானசார தேரர் தலைமையிலான ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் பரிந்துரைகள் கிடைத்த பின்னர், தேவையான திருத்தங்களைச் செய்யலாம் என்று அமைச்சர்களான விமல் வீரவங்ச, உதய கம்மன்பில ஆகியோர் தெரிவித்தனர்.

முஸ்லிம்களின் கலை, கலாசாரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சட்டத்திருத்தங்களைச் செய்வதில் தவறில்லை என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். அங்கு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, 'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணியின் பரிந்துரைகள் கிடைத்த பின்னர், இதில் திருத்தங்களை மேற்கொள்ள முடியும் - என்றார். (ஒ-4,இ)

## கோத்தாபய – ரணில் பேச்சு தகவலை மறுத்தது ஐ.தே.க.

**கொழும்பு, பெப். 24**

**ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் இரகசியப் பேச்சில் ஈடுபட்டு வருகின்றார் என்று வெளியாகி வரும் தகவல்களை ஐக்கிய தேசியக் கட்சி மறுத்துள்ளது.**

ரணில் விக்கிரமசிங்க, கோத்தாபய ராஜபக்சவுடன் இரகசிய பேச்சு நடத்தி வருகின்றார் என்றும் இதற்கு ரணிலின் மருமகளான இஷானி விக்கிரமசிங்க, உதவி வருகின்றார் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இதையடுத்தே இந்தத் தகவல்களை ஐக்கிய தேசியக் கட்சி மறுத்துள்ளது.

இதேவேளை முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம ஆகியோர், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டணி ஒன்றை, அமைப்பதற்கான முன்னெடுப்புக்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் தகவல்கள் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (ம)



# அலுவலகம் திறந்து வைப்பு

மன்னார், பெப். 24

மன்னார் மாவட்ட சாரணர் சங்கத்தின் புதிய அலுவலகம் நேற்றுமுன்தினம் காலை திறந்து வைக்கப்பட்டது. இதன்போது சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் பேடன் பவலின் 165 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, மருத்துவமுகாமும் இடம்பெற்றது. மன்னார் மாவட்டச் செயலர் ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மன்னார் பிரதேச செயலர் எம். பிரதீப், மன்னார் மாவட்ட சாரணர் சங்கத்தின் தவிசாளர், மன்னார் சாரணர் சங்க மாவட்ட ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-ரி1-56)

# விண்ணப்பம் கோரல்

கொழும்பு, பெப்.24

ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு பீடத்தால் மீன்பிடியியலில் முதுவிஞ்ஞான மாணிப்பட்டம் மற்றும் பட்டப்பின் டிப்ளோமா பட்டம் ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் எனவும், இந்தத் துறையில் தொழில்புரிய விரும்பும் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

*******

கொழும்பு, பெப்.24

சப்ரகமுவ பல்கலைக்கழகப் பட்டப்பின் படிப்பு பீடத்தால் தகவல் தொழில்நுட்ப முதுமாணிப்பட்ட கற்கை நெறிக்கான விண்ணப்பங்களை கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை நாளைய தினத்துக்கு முன்னர் அனுப்பி வைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பாடசாலை மாணவர்களுக்கு இரண்டாம் கட்டத் தடுப்பூசி

சாவகச்சேரி, பெப்.24

16 வயது தொடக்கம் 19 வயது வரையான மாணவர்களுக்கு பைஸர் இரண்டாவது தடுப்பூசி வழங்கும் பணியை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் முன்னெடுத்துள்ளனர். தூர இடங்களிலிருந்து வரும் மாணவர்களின் நலன்கருதி அந்தந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் இன்றும் தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்படி, கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியிலும், எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளின் மாணவர்கள் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திலும், நாவற்குழி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளின் மாணவர்கள் நாவற்குழி மகா வித்தியாலயத்திலும், கைதடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளின் மாணவர்கள் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# வழிபாடு நடத்த படையினர் தடை

சாவகச்சேரி,பெப்.24

கேரதீவு - சங்குப்பிட்டியில் அந்தோனியார் ஆலயத்தில் வருடாந்த உற்சவத்தை நடத்த படையினர் தடை விதித்ததால், கத்தோலிக்க மதகுருவும், பங்கு மக்களும் திரும்பிச் சென்றனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

ஆலயத்தில் உற்சவம் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, பங்குத் தந்தையும், மக்களும் வாகனத்தில் அங்கு சென்ற வேளையில், படையினரும், பொலிஸாரும் கொரோனாத் தொற்று நிலைமையால், அங்கு வழிபாடு நடத்த அனுமதி வழங்க மறுத்துள்ளனர். அதனால் மக்கள் வழிபாடு செய்யாமல் திரும்பிச் சென்றனர். (ஒ-4,9)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி, புன்னாலைகட்டுவன் சந்தியிலிருந்து நிலாவரை புத்தூர் றோட்டில் காணி 10 பரப்பு விற்பனைக்கு உண்டு. புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம் வாகையடி சந்தி **074 269 0854**

(CS 18434) (3/6)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மறவன்புலவு பகுதியில் மறவன்புலவு மத்தி அம்மன் கோயிலடியில் 4 பரப்புக்காணி புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)
A-32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
பார்வையிடும் நேரம்:
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை
தரகர் தேவையில்லை
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS 18439) (3/6) தொடர்பு: **077 241 7589**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.